# சௌமியன்

முதற் பதிப்பு: 1950
இரண்டாம் பதிப்பு: 1956

**விலை ரூபாய் ஒன்றே கால்**

இந்நூலின் வரிகளையோ-கருத்தையோ
ஆசிரியர் இசைவின்றி எவரும்எங்கும்
எடுத்தாளக்கூடாது

அச்சு: பழநியம்மா அச்சகம், புதுச்சேரி.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI

# செளமியன்

பாரதிதாசன்

Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAN,
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.

பாரதிதாசன் பதிப்பகம்
புதுச்சேரி

48489
5430

# முதற்பதிப்பு முன்னுரை

1939 ஆம் ஆண்டு வாக்கில் நான் "தமிழரசி"ல் முறையாகக் கட்டுரை கவிதை எழுதி வந்தேன். அதற்குரியவர் உயர்திரு, டாக்டர் மே. மாசிலாமணி முதலியாராவார். அவர் இல்லத்தில் யான் இடையிடையே தொடர்பாகப் பன்னாள் தங்குவதுண்டு. அப்போதெல்லாம் முதலியார் எனக்குத்தந்தை போல் உண்டி, உறையுள் தந்து காத்து வருவார். "தமிழரசு" நிலையத்தில் எழுதியதாகும் இச் "சௌமியன்" நாடகம். மேலட்டை, முகவுரை சேர்க்கு முன்வையப் பெரும் போர் தொடங்கி விட்டது. இந்நாள் குறை முடித்து வெளியிடலாயிற்று. இப்பணியில் டாக்டர் எனக்குச் செய்த உதவி மறப்பதரிது.

1-1-47

பாரதிதாசன்

# சௌமியன்

## காட்சி 1.

இடம்: வஞ்சிக்கிராமம்; குடியானவர் வீடு.

காட்சி உறுப்பினர்: குடியானவன், சீனன், பூங்கோதை சேவகன்.

*அதிர்ஷ்டம் வருகிறது உனக்கு!*

*[என்று சொல்லிக்கொண்டே குடியானவன் வீட்டில் நுழைந்தான் கிராமச்சேவகன். சீனன் என்னும் வஞ்சிக் கிராமத்துக் குடியானவன், தன் மகள் பூங்கோதைக்கு நிச்சயித்திருந்த கலியாண மகிழ்ச்சியிலிருந்தான். சேவகனைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். சந்தோஷ உள்ளத்தில் அச்சம் குடிபுகுந்தது.]*

*வாங்க; உக்காருங்க; என்ன சேதிங்க?*

*[என்று பயத்தோடு கேட்டான் குடியானவன்.]*

**சேவகன் :** இனி உனக்கு என்ன குறைச்சல்! நான்கூட இனி உனக்குப் பயந்துதான் நடக்கவேண்டும்.

**குடியானவன் :** நீங்க இந்த ஏழைக்குப் பயப்படுவதாவது.

**சேவகன் :** கிராமபதி உன்னிடம் அகப்பட்டுக்கொண்டார்; இனி, நீ சொன்னபடிதான் அவர்.

**குடியான :** ஐயா, எனக்கு ஒண்ணும் புரியலிங்களே.

**சேவகன் :** நேற்றுக் கிராமபதியவர்கள் கிராமத்தைச் சுற்றி வந்தாரல்லவா? அவர் கிருபை உன் குடும்பத்தின் மேல் விழுந்தது?

**குடியான :** இன்னதென்று சொல்லமாட்டேன் என்கிறீங்களே?

**சேவகன் :** உன் மகள் தெரு வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தாளாமே.

[குடியானவனுக்கு விஷயம் முற்றும் விளங்கி விட்டது. தன் ஓரே பெண்ணின் நன்மையில் ஓடியது அவன் நெஞ்சம்.]

**குடியான :** இருக்கலாங்க அது பற்றி என்னுங்க?

(என்று பயத்தோடு கேட்டான்.)

**சேவகன் :** வேறொன்றுமில்லை. கிராமபதியவர்களின் வீட்டில் தோழிப்பெண் இல்லை. அதற்காக.

**குடியான :** ஐயோ! என் குடும்பத்தில் அந்த மாதிரி வழக்கம் இல்லிங்களே! ஐயா, உங்க காலைப் பிடித்துக் கொள்கிறேன்; கிராமபதி ஐயாவுக்குச் சமாதானம் நீங்கதான் சொல்லணும்.

[உள்ளே பூங்கோதை தலைவாரி முடித்துப் பூ வைத்துக், காதில் நாகவடமும் முத்தரியும் போட்டு அரக்குப்பட்டுக் கண்டாங்கி உடுத்தி முத்துப்பல் காட்டி, உப்பிட்டுக் குலுக்கிய நாவற்பழத்தை இரு கைநிறையஏந்தியபடி,]

அப்பா !

[என்று அங்கு வந்தாள். அச்சமயம் சேவகனைக் கண்டாள். அவளின் சிரித்த உதடு பயத்தால் மாறியது. திடுக்கிட்டு நின்றாள். வேறு வழியில்லை. பழையபடி பறந்தாள் உள்ளே.]

**சேவகன் :** கூப்பிடு ! அவள்தானா உன் மகள் ?

[குடியானவன் மனம் பயத்துக்கு அப்பால் போய்விட்டது.]

அதெல்லாம் முடியாது !

[என்று கண்டிப்பாகக் கூறினான்.]

**சேவகன் :** உன் மகளை – நான் சொல்வதைக் கேள் – உன் மகளைக் கிராமபதியிடம் அனுப்பு. அவர் உன் மகள் ஞாபகமாகவே இருப்பார். அவள் பச்சைக்கிளிபோல் இருக்கிறாள்.

[இதைக்கேட்ட குடியானவன் மரம்போல் சும்மா இருந்து–தனக்குச் சிறிதும் சம்மதம் இல்லாமையைத் தெரிவித்தான். சேவகனுக்குக் கோபம்.]

**சேவகன் :** 'அவளைக் கையோடு இழுத்துவா' என்று கிராமபதி என்னிடம் கூறியிருந்தால், விட்டுப்போகமாட்டேன். அடே வந்ததைப் படு !

[சேவகன் கோபத்தோடு சென்றான். குடியானவன் தனக்கு நேர இருப்பவை எவை என்பதை நினைத்து மனமுருகி, வயலுக்கு நடந்தான்.]

## காட்சி 1. அ,

[குடியானவன் வயற்களத்தில் வைக்கோற் போரின் நிழலில் நின்றிருந்தான். ஆட்கள் கோணிப் பைகளில் நெல்லை வாரிக் கட்டிக் கொண்டிருந்தார்கள். உக்கிரம் இல்லாத அந்தி; புழுக்கமில்லாதசமயம். சீனன் புழுக்கமுடைய நெஞ்சத்தோடு நின்றிருந்தான் அங்கே.]

"உலகம் உண்டுகாண், சூரியன் உண்டுகாண்
ஓடிப்பாயும் மணிப்புனல் உண்டுகாண்,
இலகும் மக்களின் மலைப்புயக் கூட்டங்கள்
எங்குப் போயின எண்ணுக நெஞ்சமே!
கலகம் செய்வதும் கைப்பொருள் கவர்வதும்
கயவர் செய்கை; ஆயினும் அன்னது
சிலதினங்கள் இருக்கும்; பின் அது
தீர்ந்து போகும். செம்மை யுண்டாகுமே!"

[என்ற ஓர் தமிழ்ப்பாட்டு குடியானவன் காதில் வீழ்ந்தது. எதிரில் ஆசிரமவாசி ஒருவன், ஆலமரத்தின் அடியில் நிற்பதைக் குடியானவன் கண்டான். அதே சமயத்தில் இரு சேவகரும் கொள்ளைக்காரரும் குடியானவனை நோக்கி வந்தார்கள். குடியானவன் மரத்தில் கட்டப்படுகிறான். நெற்குவியல் கொள்ளையடிக்கப் படுகிறது.]

**குடியான:** அரசாங்கம் இல்லை; நீதியில்லை!

[என்று கூவியழுதான்.]

[ஆலமரத்தடியில் இரு கண்கள் எரிந்தன. ஆஸ்ரமவாசி தன் உடைவாளை உருவுகிறான். ஆனால், அவன் மனக்கண்முன், தன் குருவின் ஆஸ்ரமத்திலிருந்து விடைபெற்றுத் திரும்பும் போது, குரு, 'நீ என் உத்தரவின்றிப் பொது விவகாரங்களில் கலந்து கொள்ளாதிருக்க' என்று கூறி கையமைத்தது தோன்றவே, ஆஸ்ரமவாசி திரும்பவும் உடைவாளை உறையில் இட்டுக் குடியானவனை நோக்கி ஓடி வந்தான். அதற்குள் கொள்ளைக்காரரும் சேவகரும் போய்விட்டார்கள். ஆஸ்ரமவாசி குடியானவனை அவிழ்த்துவிட்டு,]

**ஆஸ்ரமி:** ஐயா, என் கைகள், என் குருவினால் கட்டப்பட்டிருக்கின்றன!

**குடியான:** அப்பனே! நீ பார்த்திருந்தாயல்லவா இந்தக் கீழான நடவடிக்கைகளை? கிராமபதியிடம் செல்லுவோம்.

**ஆஸ்ரமி:** ஞாயம் கிடைக்குமென்று நினைக்கிறீரா? என்னால் தடையில்லை.

[என்று சொல்லிக் குடியானவனைக் கூட்டிக் கொண்டு கிராமபதியிடம் நடந்தான் ஆஸ்ரமவாசி.]

## காட்சி 1. ஆ.

*[பல சேவகர்கள் சகிதம் கிராமபதி உட்கார்ந்திருந்தான். இரு சேவகர்கள் பூங்கோதையை இழுத்து வந்தார்கள். அவள் அவர்கள் கைகளினின்று தப்பிப் பறந்துபோக முயன்ருள். அந்தச்சிறகு அற்ற அன்னம், மீண்டும் இழுத்து நிறுத்தப் பட்டாள் கிராமபதி எதிரில்.]*

**பூங்கோதை :** *என்னை ஏன் தொல்லை பண்ணுகிறீர்கள்?*

*(என்று துடிதுடிப்போடு கேட்டாள்)*

**கிராமபதி :** *நீ என் வீட்டில் தோழிப் பெண்ணுயிருந்தால், உனக்கென்ன முழுகிவிடும்? எல்லாச்சுகமும் உனக்கு உண்டாகுமே!*

**பூங்கோ :** *வேண்டாம்ஐயா.*

*(என்று அழுது நிற்கையில் ஆஸ்ரமியும், குடியானவனும் வந்தனர். குடியானவன் தன் மகள் அங்குத் துன்புறுவதைக் கண்டு ஆத்திரத்தோடு,)*

*இது ஞாயமா ஐயா? கலியாணம் ஆகவேண்டிய பெண்ணுச்சுதே!*

**கிராமபதி :** *ஏன் ஆஸ்ரமியே! நீ எங்கு வந்தாய்? ஊர் விவகாரத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்று உனது குரு சந்த்ரசேனர் உனக்குக் கட்டளை இட்டிருக்கவில்லையா?*

**ஆஸ்ரமி :** ஆம்! உமது சேவகர் சிலரும், மற்றும் கொள்ளைக் காரரும் இந்தக் குடியானவரை மரத்தில் கட்டிவிட்டு, நெல்லைக் கொள்ளையடித்துப் போனதை நான்பார்த்தேன்.

**கிராமபதி :** அப்படியா! இதைக்கேள். சேவகனே என்ன நடந்தது?

**சேவகன் :** நானும் தண்டலதிபரும் இந்தக் குடியானவனிடம் போய் வரி கேட்டோம். என்னையடித்ததோடு இந்த ஆஸ் ரமியும் குடியானவனும் தங்களையும் தங்கள் ஆட்சியையும் குறை கூறினார்கள்.

**குடியான :** ஐயோ இல்லையே ஐயா!

**ஆஸ்ரமி :** இருக்கட்டுமே. நாங்கள் குற்றம் செய்தோம். இந்த மங்கை என்ன செய்தாள்?

**கிராமபதி :** ஏன் சேவகனே, இவளும் திட்டவில்லையா?

**சேவகன் :** ஓ! திட்டினளே!

**கிராமபதி :** நீ மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போய்விடு. சேவகனே, இந்தக் குடியானவனைத் தூணில் கட்டு!

[சேவகரால் குடியானவன் தூணில் கட்டப் பட்டான்.]

இவளை உள்ளே அழைத்துப் போ!

[சேவகர் அவளை நெருங்கினர். கட்டப்பட் டிருந்த குடியானவன் கட்டைத் திமிறிப் பார்த்தான். ஆஸ்ரமி தன் வாளை உருவிச் சேவகர்களையும் கிராமாதிபதியையும் வெட்

டப்போகும் சமயம், அவன் கண்ணில் தனது குருவின் 'தடுக்குங்கை' தோன் றிற்று !]

ஐயோ ! இந்த பாவிகளை விட்டு வைப்பதா ?

[என்று தலையில் அடித்துக்கொண்டு வெளி யிற் சென்ருன். சேவகர் பூங்கோதையை உள்ளே தள்ளிஞர்கள். பூங்கோதையின்

அப்பா ! அப்பா !

என்ற கூச்சல் கட்டிடத்தை அதிரச் செய் தது.]

## காட்சி 2.

இடம்; சேதுநகர்—மாளிகை.

காட்சி உறுப்பினர்; நகரபதி, வர்த்தகன் பிரதானிகள், நாட்டியக்காரி, பணிப்பெண்கள்.

[சேதுநகர் மாளிகையின் உல்லாச மண்ட பத்தில், நகரபதி தனது தலைப்பாகையைக் கழட்டி ஓர் புறம் வைத்து, மெத்தைமேல் சாய்ந்திருக்கச் சில பெண்கள் வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். ஒருத்தி கால் வருடிக் கொண்டிருக்கிருள். பிரதானிகள் சேவகர்கள்புடை சூழ்ந்திருக் கிருர்கள். நாட்டியக்காரி நாட்டியம் ஆரம்பித் தாள் பாடிக்கொண்டு.]

"பாவை வைத்து நான் ஆடப்பார்த்த இளங்கோமான்,
நாவை அசைத்துக் காட்டி நல்விழியும் காட்டி, எனைத்
தேர்நிறுத்தும் சாலையிலோர் சிற்றிடத்திற் கூட்டிப்போய்,
தேர்நிறுத்திச் செய்தி நிகழ்த்தவோ என்றுரைத்தான்;
என்ன என்றேன். என்றன் இருகையும் பற்றி அவன்,
தின்னு இதழ்தன்னைத் தின்பான்போல் தான் சுவைத்தான்!
பட்டி மகன் போம்போதும் பார்வையினுல் சுட்டுவிட்டே
எட்டி நடந்தான் என்னைவிட்டு,

[இந்தப் பாட்டிற்கானபடி பாவனைகாட்டி அங்கு இருந்தவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்திஞள். முடிவு பெற்றதும்,]

**சேவகன் :** ப்ரபூ! தங்கள் சேவைக்குக் காத்திருக்கிருர் வைர வர்த்தகர் தலைவாசலில்.

**நகரபதி :** உத்தரவு.

[சேவகன் ஓடி வர்த்தகனை உள்ளே அனுப்ப வர்த்தகன் நகரபதியை வணங்கித் தன்னிடமிருந்த விலையுயர்ந்தமணிகளைப்பரப்பிஞன். நகரபதி ஆச்சரியத்தோடு அவைகளைப் பார்த்தான்.]

**நகரபதி :** ஆஹா! இந்த நகரின் வர்த்தகர் உண்மையில் மகோன்னத நிலையிலிருக்கிருர்கள்.

**வர்த்தகன் :** ப்ரபூ! உண்மையில், தங்கள் கிருபையால் நாங்கள் நல்ல நிலையில் இருக்கிருேம் லங்கை நாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டது முதல்!

**நகரபதி :** வர்த்தகரே, உம்மை அழைத்தது உமது வைரத்தை வாங்குவதற்காகவல்ல. நான் அன்று பவனி வந்தபோது நீர் எழுந்து மரியாதை செய்யவில்லை. அதன் பொருட்டு

உம்மை, எனது தலைவரும்-இந்நாட்டு மன்னருமான ரவி கேது மன்னரின் பேரால் சிறைப்படுத்துகின்றேன். சேவகர்களே!

**வர்த்தகன் :** ஐயோ இதென்ன அநியாயம். சில வைரங்களை யாவது தாங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

[என்று கதறி நகரபதியின் காலில் விழப் போனான். சேவகர்கள் அவனை இழுத்துச் சென்றார்கள். பொருள்களை மற்றுள்ள சேவகர்கள் தூக்கி நகரபதியிடம் வைத்தார்கள்.

**நகரபதி :** பிரதானி ஒருவன் வருக!

[அங்கிருந்த பிரதானி ஒருவன் நகரபதியின் வாயண்டைத் தன்காதுகளைச் சேர்க்கிறான்.)

வர்த்தகர் வீதியில் சேவகர், கொள்ளைக்காரர் சகிதம் செல்லுக. விலையேறப்பெற்றபொருள்களை ஆக்ரமிக்க; பணப் பெட்டிகளைக் கொண்டு வருக.

(பிரதானியும் அங்கிருந்த சேவகர்களும் குதித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.)

## காட்சி 2. அ.

(ஆஸ்ரமிகள் அநேகர் ஓர் தோட்டத்தில் பேசிக்கொண்டும், தாம் கற்ற வித்தை களைப் பயிற்சி செய்துகொண்டும் இருந் தார்கள்.)

**பதுமன் :** நான் பேசும் சித்திரம் வரைந்திருக்கிறேன் பாருங்கள்.

[படத்தில் அனைவர் கவனமும் சென்றது.)

**கோபதி:** அப்படி ஒன்று உண்டா?

**பதுமன்:** நிரூபிக்கிறேன்.

[என்று கூறித் தான் எழுதிய படத்தின் ஒரு பகுதியை மாத்திரம் காட்டி;]

இது என்ன?

**சுந்தரன்:** தோப்பில் நடுவிற் செல்லும் ஓர் பாதை,

**பதுமன்:** அதற்குமேல்?

**சுந்தரன்:** தட்டுமுட்டுச் சாமான்கள் ஏற்றியுள்ள ஓர் இரட்டை மாட்டுவண்டி.

**கோபதி:** இதோ பிரயாணியையும் வண்டிக்காரனையும் திருடர்கள் அடிக்கிறார்கள்.

**பதுமன்:** பிரயாணி, வண்டியைக் காட்டி—அதிலுள்ளவைகளை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்; என்னை இம்சை செய்யவேண்டாம்...' என்று சொல்லுகிறானல்லவா? என் சித்திரம் பேசவில்லையா?

[அனைவரும் கைகொட்டிச் சிரித்து,]

உண்மையப்பா!

[என்றுகூறி மகிழ்ந்தனர்.]

**வேலன்:** அது கிடக்கட்டும். நமது குரு நமக்குப் பலகலைகளைப் போதித்து நம்மை வாள் ஒன்றையும் சுமக்கவைத்து, நமதுகைகளை மாத்திரம் கட்டி வைத்து விட்டாரே!

**சுந்தரன்:** தக்க காலத்தை அவர் எதிர்பார்க்கிறார்.

**பதுமன்:** இல்லை. அவர் கொள்கை அஹிம்ஸை.

**சுந்தரன்:** இல்லை. நல்ல நம்பியார் அகிம்சாதர்மர்.

**கோபதி:** லட்சியத்தை அடையும் மார்க்கத்தில் இம்சை இருக்கத்தான் வேண்டும்; இருப்பது இயற்கை.

**சுந்தரன்:** நமது ரவிகேது மன்னரின் கொள்கை இன்னதென்று நான் சொல்லட்டுமா?

**பதுமன்:** ஹாஸ்ய முறையில் சொல்லிக் காட்ட முடிந்தால் சொல்.

**சுந்தரன்:** அரசரும் அவர் பரிவாரமும் குழந்தைகள். அக்குழந்தைகட்கு, ஜனங்கள் அப்பம், பிட்டு, பலாச்சுளை, பொம்மை, கண்விழிக்காத நாய்க் குட்டிகள்! கொலை என்பது அவர்கட்குத் தாய்ப் பால்! கொள்ளை நிலாச் சோறு!

[ இதுகேட்டு அனைவரும் சிரித்தார்கள். ]

**பதுமன்:** சுந்தரா, எடுத்துக் கொள் உன் வாளையும் கேடயத்தையும். சற்றுநேரம்......

(சுந்தரன் வாளையும் கேடயத்தையும் தூக்கி நின்றான். பதுமனும் அவ்வாறே எதிர்த்தான். இருவரும் வாட்போர் நிகழ்த்தினர். அச்சமயம் ஓர் வேட்டுச் சத்தம் கேட்டது.)

**வேலன் :** தோழர்களே, வேட்டுச் சத்தம்! நகரபதியின் ஆயுதச் சாலையின் துப்பாக்கி என்று நினைக்கிறேன்.

[ அனைவரும் அசைவற்று நின்றார்கள். ]

**பதுமன் :** நாம் போவதால் ஆவதென்ன ?

[ ஆனால் அனைவரும் வர்த்தக வீதி நோக்கி ஓடினார்கள். வர்த்தகர்கள் பல திக்குகள் நோக்கிச் சிதறி ஓடுகிறார்கள். வீதியில் வேட்டுகள் அதிகக்கலவரத்தை உண்டாக்கு கின்றன. சேவகர்களும் மற்றும் கொள்ளைக் காரர்களும்பொருள்களை வண்டிகளில்ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்ரமிகள் ஒரே சமயத்தில் தங்கள் கத்திகளை உருவினார்கள். அவர்கட்கு எதிரில் 'தடுக்குங்கை' தோன் றவே திகைத்து நின்றார்கள். ]

**சுந்தரன் :** அந்தோ அக்ரமத்தின் ஆடம்பரமே! தோழர்களே, நமது குருவிடம் ஓடுவோம்; நடக்கும் அக்ரமங்களைக் கூறுவோம். நமக்கு அவர் உத்தரவு தரட்டும் இந்த அயோக்கியரைக் கொன்று போடும்படி. இல்லையேல் அவர் பாதத்தில் நாம் சுமக்கும் இந்த வாட்களை எறிந்து விட்டுத் திரும்புவோம்.

[ அனைவரும் தலைகுனிந்து நடந்து போனார்கள் தமது குருவை நோக்கி. ]

## காட்சி 3

**இடம் :** இராஜதானி. சந்த்ரசேனரின் ஆஸ்ரமத்தை அடுத்த ஓர் சோலை,

**காட்சி உறுப்பினர்:** சந்த்ரசேனர், சேனபதி ரதன், நல்ல நம்பி, சௌமியன், ஆஸ்ரமிகள்.

*[ஆஸ்ரம சிஷ்யர்களின் எதிரில் சந்த்ரசேனர் ஓர் பீடத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் உபதேசத்தைச் சிஷ்யர்கள் ஆவலாகக் கேட்டிருந்தார்கள். சேனபதி ரதனும், நல்ல நம்பியும் அங்கு ஒரு புறம் இருந்தார்கள்.]*

**சந்த்ரசே:** உங்கள் எதிரில் உலகம் நடக்கிறது. அதை நீங்கள் நோக்குக. உங்கள் பார்வையை விசாலப் படுத்துக. அறிவுலகில் ஏறுக. நீங்களும் இவ்வுலக மக்களும் ஒன்றே என உணர்க.

உங்கள் எதிரில் நல்லனவும் தீயனவும் நடக்கின்றன. ஆளுவதும் ஆட்படுவதும் நடக்கின்றன. நல்லனவற்றை ஆதரியுங்கள். தீயனவற்றை எதிர்க்க நீங்கள் ஆயத்தமாயிருங்கள், உலக நலத்திற்காக நீங்கள் எதற்கும் சித்தமாயிருங்கள்.

நீங்கள் பொது மக்களுக்குச் செய்யும் தொண்டு, நீங்கள் உங்களுக்குச் செய்யும் தொண்டென்று உணருங்கள். அது அன்பு நெறியாம்.

அன்பு செய்யுங்கள்; அதனுல் அன்பை வளருங்கள்.

அன்பினுல் இவ்வுலகம் ஒன்றுபடும். ஒன்றுபட்ட உலகம் சாந்திக்குத் தகுதியாகும்.

விடைபெற்றுக் கொள்க.

*[சிஷ்யர்கள் குருவை நமஸ்கரித்துச் சென்ருர்கள்.]*

**சௌமியன் :** ஸ்வாமி! நாட்டு மக்கள் படுந்தொல்லை சகிக்க முடியவில்லை. அவர்கட்கு மீட்சியில்லையா? எங்கள் கண்ணெதிரில் தினமும் நடைபெறும் அக்ரமங்களை எதிர்க்க எங்கள்தோள் எழுகின்றது. ஆயினும் தங்களின் ஆணை, அத்தோளை வலியற்றதாக்கி விடுகின்றது. இதோ கிராமத்திலிருந்தும், நகரத்திலிருந்தும், தங்கள் சிஷ்யர்கள் தங்களிடம் அங்கு நடைபெறும் அக்ரமங்களைச் சொல்லிக் கொள்ள வந்து காத்திருக்கிறார்கள்.

**1–வது ஆஸ்ரமி :** ஸ்வாமி! நான் வஞ்சிக் கிராமத்தில் அந்தக் கிராமபதி இழைத்த அக்ரமங்களை நேரில் பார்த்தேன். சீனனின் மகளைக் கற்பழித்தான்! அவன் நெற்குவியலைக் கொள்ளை யடித்தான். சீனனையும் இம்சித்தான். என்னால் சகிக்க முடியவில்லை.

*[என்று கண்ணீர் விட்டான்.]*

**2–வது ஆஸ்ரமி :** ஸ்வாமி, அக்ரமங்களை எதிர்த்துப் போராட எமக்கு உத்தரவு கொடுங்கள். இல்லாவிடில் எம் கண்களைப் பிடுங்கி விடுங்கள். அக்ரமத்தைப் பார்க்க முடியவில்லை.

**3–வது அஸ்ரமி :** பெரும்பட்டி நகரில் ஸ்வாமி! சத்திரத்திற்கென்று விடப்பட்டிருந்த சொத்துக்களை யெல்லாம் அரசாங்கத்தில் சேர்த்தாயிற்று. யாத்ரீகர்கள் பசியோடு திரும்புகிறார்கள்.

**4–வது ஆஸ்ரமி:** சேரிக் கிராமத்தில் உள்ள அனைவர்சொத்தும் பறிமுதல் செய்து விட்டான் ஸ்வாமி, கிராமபதி.

*[என்றார்கள். அனைவரும் குருவின் கட்டளைக்குக் காத்திருந்தார்கள்.]*

**குரு :** அன்பர்களே, உங்கள் நோக்கம் நன்று. நீங்கள் அடைந்துள்ள தேசபக்தி மேன்மை யுடையது. மக்களின் க்ஷேமம் உங்கள்க்ஷேமம் என்றுஉணர்கின்றீர்கள்.பாராட்டுகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் இல்லாதவர்கட்கு உங்களிடம் இருப்பனவற்றை உதவுதலிலேயே கவனம் செலுத்த வேண்டும். அதனால் மக்கள் அறிவிலே தெளிவு பெறுவார்கள். நெஞ்சிலே உறுதி பெறுவார்கள். அகத்திலே அன்பின் ஓர் வெள்ளம் அடைவார்கள். பொறிகளின்மீது அவர்கட்கு ஆட்சி நடத்தும் பக்குவம் உண்டாகும்.

காலம் வரும்!

[என்று சொல்லித் தமது தடுக்கும் கை காட்டிச் சிஷ்யர்களை அமர்த்தினார். அனைவரும் ஆஸ்ரமத்தை நோக்கி நடந்தார்கள். நடக்கையில் சௌமியன் மற்றவர்களைத் தடுத்து நிறுத்தித் தன் உத்ஸாகத்தை வெளிப் படுத்தினான்.]

**சௌமியன் :** தோழர்களே, குருவின் கடைசி வார்த்தையைக் கவனித்தீர்களா? காலம் வரும்—

**கோபதி :** ஆம். நமக்கு அவ் வார்த்தை உத்ஸாகத்தை உண்டாக்குகின்றது.

[அனைவரும் வாளை உருவி உயரத்தூக்கி,)

காலம் வரும்!

(என்று சொல்லி உறையிலிட்டுப் போனார்கள்.)

## காட்சி 3. அ.

**நல்ல நம்பி:** சந்த்ரசேனரே, ஒரு சந்தேகம்! முதலில் உமது சிஷ்யர்களின் உள்ளத்தை வியந்தீர்கள். பின் நாட்டின் தொண்டு இன்னதென்று உபதேசித்தீர்கள்! நன்று' 'காலம் வரும்' என்று முடித்தீர்களே, நீர் எதிர் பார்க்கும் காலம் எது? படுகொலை செய்து ரத்தம் சிந்தும் யுத்த காலமா?

**சேனுபதி:** ஆம். வேறென்ன? இந்த மன்னனும் அவனைச் சார்ந்த நகரபதிகள் கிராமபதிகள் உத்தியோகஸ்தர்களும் பொது மக்களை இம்சிக்கிருர்கள்,

**ந–நம்பி:** அதன் பொருட்டு அவர்களை நாமும் கொலைசெய்வதா?

பரிகாரம் தேடுகிறேன் என்று சொல்லி மக்களை இம்சிக்கிறவன் நாட்டில் இம்சையை வளர்க்கிறவனுகிருன்.

காப்பவனைத் தேடித் தவங்கிடக்கும் இவ்வுலகம் அழிப்பவனைச் சுமக்கவும் சகிக்குமா? குற்றம் புரிந்த அவயவங்களைத் தண்டிக்கும் மனிதனைக் கண்டோமா?

மனித வெள்ளத்தில் ஒரு துளி தவறு செய்தால், அதன் பொருட்டு அது இம்சை யடைந்தால், அனுபவிப்பது அந்தத் தனித் துளிமட்டுமா?

தீய உள்ளத்தை அன்பினுல் மாற்றி அவனைத்திருந்தச் செய்து, அவன் அன்னையை மகிழச் செய்வோம்.

திருந்தக்கூடிய மனிதனை அவன் அன்னை வயிறு கொதிக்க கொலை செய்யாதிருப்போம்.

ஒரு சிறுகூட்டம் அநீதியே செய்கிறது; இம்சையே செய்கிறது. அந்த அழுக்குக் குட்டையோடு மனிதப் பெருங் கடலைப் பரிசுத்தப் படுத்திச் சங்கம மாக்குவோம்.

கொடியவன் நல்லவன் ஆகிறதில்லை என்று நீவிர் கருதுவீராஞல், முன்னோர் சொன்ன நீதி சாஸ்திரங்களும் அன்பின் மகத்துவமும் நாணித் தலைகுனிந்து விடுமே.

ரவிகேதுமன்னனைத், திருத்துவோம். அவன் எனக்கும் சந்த்ரசேனருக்கும் சிறுவயது முதல் நண்பனுய் இருக்கின்ருன். நிமிஷந்தோறும் மக்களைக் கல்வி கேள்விகளில் உயர்த்துவோம். கல்வியின் ஒளி மக்கள்பால் பரவும். அது அக்ரமம் செய்யும் மனிதனுக்கும் அறிவு கொளுத்தும்.

**சந்த்ரசே:** உலக மக்கள் போய்ச் சேரவேண்டிய இடம் ஒன்று. அது சாந்திமயமானது! அங்கு இம்சையில்லை! பேதமில்லை! துன்பமில்லை.

அனுல் அவ்விடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் பாதையில் ஏகதேசம் இம்சை யில்லாமற்போகுமா? நண்பரே, நான் நினைப்பது பிழையாய். இருக்கலாம். இம்சை அடியோடு நீக்க முடியாதது என்பதுதான் என் அபிப்பிராயம். ஆயினும் உங்கள் வார்த்தை மக்கள்மேல் எனக்கு இரக்கத்தை உண்டாக்கிறது.

**ந-நம்பி:** மனித லக்ஷியத்தை அடையும் மார்க்கத்தில் இம்சை வேண்டியதிருக்கும் என்பதுபற்றி இன்னும் நான் சிந்திப்பேன்.

**சேனுபதி:** நீங்கள் ஒரு புஜபலம் உடையவரா யிருந்தால், இவ்வித பயம் ஏற்படாது உங்கட்கு.

[என்று நல்லநம்பியை நோக்கிச் சிரித்துச் சொன்னுன்]

**ந—நம்பி :** கத்தியும் கையுமாயிருப்பவன் புஜபலமுள்ள தைரிய சாலியோ அப்பனே ?

[ இதைக் கேட்ட சேனபதி விழித்துப் பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்தான். இச் சமயத்தில் சௌம்யன், குருவின் சமுகத்தை நோக்கி விரைவாக வந்து பணிகிருன், ]

**சௌம்யன் :** இந்த அக்ரமத்தைச் சொல்லாதிருக்க முடியவில்லை சமுகத்தில் ! மந்திரி அழகுப் போட்டி ஏற்படுத்தி இருக்கிருர் ! ஊரில் உள்ள அழகிய பெண்களையெல்லாம் உத்தியானவனத்தில் இழுத்து வந்து நிறுத்துகிருர்கள். அழகில் உயர்ந்த பெண்ணை அரசர் அடைவாராம்.

**ந-நம்பி :** இதோ நான் அரசனிடம் போகிறேன். ஐயோ என்ன அநீதி.

**சௌம்யன் :** தந்தையே, அந்தத் துஷ்டனிம் போகிறீர்கள். அபாயம் வரும். நானும் வருகிறேன்.

**ந-நம்பி :** இம்சையை நான் வெறுப்பதால், நீ வருவதையும் நான் வெறுக்கிறேன் .

[ குழந்தைப் பருவ முதல் சௌம்யனை நல்ல நம்பி வளர்த்தவராதலால், நல்லநம்பிக்கு ஏதாவது ஆபத்து அரசனுல் ஏற்படும் என்று பயந்தான் சௌம்யன். ]

**சௌம்யன் :** இந்த வாளையாவது உடன்கொண்டு போக மாட்டீர்களா ?

[ என்று வாளை நல்லநம்பியிடம் நீட்டிக் கெஞ்சினுன். ]

**ந—நம்பி:** *அன்பைவிட அது வலிவுடையதென்று நினைக்கிருய்!*

*[என்று சொல்லி நல்ல நம்பி நடந்தார். அந்தச் சாந்தம் நிறைந்த முகத்தைச் சௌம்யன் நோக்கி.]*

*எனது குரு ஓர் மூர்க்கர்!*

*(என்று முணுமுணுத்தான். ஆயினும் இப்பக்கம் திரும்பித் தன் குருவின் வீரம் ததும்பும் முகத்தைப் பார்த்து)*

*நல்ல நம்பியார் ஓர் பழங்காலப் பைத்தியம்!*

*[என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.]*

## காட்சி 4

இடம்: இராஜதானி உத்தியானவனம்.
காட்சி உறுப்பினர்: அரசன் ரவிகேது, நல்லநம்பி, ப்ரதானிகள், சேவகர்கள், பெண்கள்.

*[உத்தியானவனத்தில் பல பெண்கள் நிறுத்தப்பட்டிருக்கிருர்கள். தலைக்கொரு சேவகன் காவலில். அவர்கள் நடுங்குகின்ற உள்ளமும், பெருகுகின்ற கண்ணீரும் உடையவர்கள். சில பெண்கள் தம்மைப் பிடித்த பிடியை மீறிப்போகப் பிரயத்தனப்பட்டும் முடியாமையால் தலையிலடித்து அழுது கொண்டிருந்தார்கள்.*

அரசன் பிரதானிகள் சகிதம் அங்கு வந்து கொண்டிருந்தான், பசிகொண்ட புலி மான் மீது பாய்வதுபோல்! அவனைத் தொடர்ந்து நல்ல நம்பியும் வந்துகொண்டிருந்தார் விரைவாக.]

**ந-நம்பி:** நண்பரே ஒரு விண்ணப்பம்.

[என்று நல்லநம்பி கூற, அரசன் திரும்பிப் பார்த்து,]

**அரசன்:** நல்ல நம்பியாரே, என்ன சேதி?

**ந-நம்பி:** இது பலாத்காரமல்லவா? நல்லதல்லவே!

**அரசன்:** நான் சாப்பிடுவதுகூட உமக்குத் நீயநடத்தையாகத் தானே தோன்றும்.

[என்று சொல்லிக்கொண்டே அரசன் முன்னே நடந்தான்.]

**ந-நம்பி:** எனது சகோதரிகளை............

[என்று ஆரம்பித்த நல்ல நம்பி அரசன் நெடுந்தூரம் போய்விட்டான் என்று முடிக்காமல் நிறுத்தினுர் வார்த்தையை.]

**அரசன்:** என்ன சொன்னீர் நண்பரே!

[என்று நின்ருன் அரசன். நல்ல நம்பி அரசனை அணுகினுர்.

**அரசன்:** உமது சகோதரிகளா இங்கு இருக்கிருர்கள்?

(ஆம் என்று பொய் சொல்ல நம்பி யோசித்தார். ஆயினும் அவர் மனக்கண்ணின் முன், உலகம் என்ற ஒருத்தியின் திருவயிற்றில் உலக மக்கள் உலவுவதான காட்சி தெரிந்தது. உடனே அரசன் கேள்விக்கு,)

ஆம் !

[என்று பதில் கூறினார் நம்பியார், ]

**அரசன் :** நீர் எனது நண்பர் என்பது அந்தச் சேவகர்கட்குத் தெரியாதிருக்கலாம். அதுபற்றிநான் வருந்துகிறேன். உமது சகோதரிகளைக் காட்டுவீராயின் அவர்களை அனுப்பி விடுவேன்.

[என்றுகூற நல்லநம்பியும் அரசனோடு நடந்தார். ]

**அரசன் :** நல்ல நம்பியாரே, இப்பெண் உமது சகோதரியா ?

**ந—நம்பி :** ஆம்.

[என்று கூறவே, அரசன் அவளை 'வீட்டுக்குப் போ' என்று சைகை காட்டி, அடுத்துள்ள பெண்ணை அணுகி. ]

**அரசன் :** இம்மங்கை ?

**ந—நம்பி:** ஆம். என் சகோதரியே இவள்.

**அரசன் :** இந்த யுவதி உமது சகோதரியா ?

**ந—நம்பி** இவளும் என்னுடன் பிறந்தவள்தான் !

[ இதற்குள் பண் ஒன்று கேட்டது. அரசன் அதைக் கவனித்துக் கேட்டிருந்தான். ]

**அஞ்சுகம் :** அரும்பிடும் இளமையும் அழகிய
உடலும் உனக்கே
விரும்பிடும் எனைநீ விரும்பிடுவாய்
உளம் களிக்க!
சுரும்பிடும் சுருதிகள், தென்றலின்
இனிமை இப் போது
பெருமையல் விளைத்தெனைத் தள்ளுதே
கண்ணு உன் மீது!

[ பாடிய அந்த அஞ்சுகத்தை நோக்கி நடந் தான் அரசன். ]

**அரசன் :** பெண்ணே, நீ யார்?

**அஞ்சுகம் :** நான் தங்கள் தாசி.

[ என்று கூறித் தன் தலையை நிமிர்த்தினுள் புன்னகை தோன்ற. ]

**அரசன் :** பெண்ணே, நீ இங்கே இரு. நான் மற்றவர்களையும் பார்த்து வருகிறேன்.

[ என்று மற்றப் பெண்களை நோக்கிவந்து, ]

நண்பரே, இந்த அழகிய பெண் உமது சகோதரியல்லவே.

**ந—நம்பி :** உண்மையில் என் சகோதரியே.

**அரசன் :** நல்ல நம்பியாரே, உம் சொல்லில் உண்மை சிறிதேனும் இல்லை.

**ந—நம்பி:** அன்பரே, அவள் மாத்திரம் அல்ல. இவ்வுலகப் பெண்கள் அனைவரும் என் சகோதரிகள். அதோபாரும் உமது திவ்ய ரூபலாவண்யத்தில் மையலுற்றுத் தவிக்கிறுள் அஞ்சுகம். ஆகையால் அவள் உமதுகாதலி! மற்றவர்கள் அனைவரும் உமக்கும் சகோதரிகளல்லவா?

**அஞ்சுகம்:** குளிர்புனல் சிற்றலை மீது
குதிகொள்ளும் கோகனகப்பூவிதழ்மேல்
வாராயோ வண்டே!

அளியாத செங்காயை ஆர் உண்பார்?
அகம் ஒவ்வா ரிடத்தேயும்
காதலுண்டோ வண்டே?

[அரசன் இந்தக் காதற் பாட்டை ரசித்தான். அவன் மனம் நல்ல நம்பியின் கருத்தின் பக்கம் திரும்பியது.]

**அரசன்:** நல்ல நம்பியாரே, உமது அத்தனை சகோதரிகளையும் அழைத்துப் போக உமக்கு அனுமதியளிக்கிறேன்.

[என்றுகூறி அஞ்சுகத்தைத் தாவினன். அவளும் பறந்துவந்து அவன் கைப்புறத்தில் விழ்ந்தாள். நல்ல நம்பியும் சந்தோஷத் தோடு திரும்பினர்.]

## காட்சி 4. அ.

[ரவிகேது தன் புதுக் காதலியை அணைத்த படி நடந்துகொண்டிருக்கையில், சேனு பதியும் மந்திரியும் ஓடிவந்து நின்று நமஸ் காரம் செலுத்தினர்கள்.]

**அரசன் :** சிலநாள் எனது புதிய காதலியுடன் இன்பம் அனுபவித்திருப்பேன். அதுவரைக்கும் இந்தத்தேசத்தை மந்திரி ஆண்டு வருவார்! என் ஆணையைச் சேனுபதி மேற்கொண்டு நடக்க வேண்டும்.

**சேனுபதி :** இது வழக்க விரோதம் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**அரசன் :** இல்லை இல்லை. மந்திரியார் என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்· இதுபற்றிய விவாதம் முற்றுப்பெற்றது.

[ சேனுபதி ரதன் வருத்தத்தோடு வணங்கிப் போனுன். அஞ்சுகம் மந்திரியை நோக்கி, ]

**அஞ்சுகம் :** நான் அரசரின் அன்பைப் பெற்றது தங்களால். ஆதலால் தற்காலிகமாகத் தேசத்தை ஆளும் பாக்கியம் நீங்கள் பெற்றீர்கள்.

**மந்திரி :** தங்கட்கு நன்றி செலுத்துகிறேன்.
[ இருவரையும் வணங்கிப் போனுன் ]

## காட்சி 5.

இடம்: ஆஸ்ரமத்தை யடுத்த பூங்காவனம்.

காட்சி உறுப்பினர்: சந்த்ரசேனர், குமாரி பத்ரா, தோழியர், அரசகுமாரன் பானு, செளம்யன், பிறர்.

[ பத்ரா, தனது தோழியர் இருவர் சகிதம் நர்த்தனம் செய்தும், பூக்கொய்தும் முடித்து, ஒளிந்து பிடிக்கும் ஆட்டத்தில் உற்சாக மிகுந்திருந்தாள்.

பூங்காவில் பழையதோர் மண்டபம்! பத்ரா தன் தோழியைத் தேடித் தனி வந்தாள். அரச குமாரன் பானு குதிரையின் மேல் வந்தான். தற்செயலாக அங்கு அவளைச் சந்தித்தான்.

அவள் அழகு அவனுக்கு வியப்பை உண்டாக்கியது. பூம்புதர்கள் அடர்ந்த வழிகள் ஒன்றுபோல் தோன்றினதால், மான் போல் மருண்டு நின்றாள் பத்ரா. அவளை நோக்கி]

**பானு:** புன்னையின் கன்றுக்குப் பின்னே தொடங்கும் பாதை, நீ போக நினைக்கும் நடுமண்டபத்தில் உன்னைச் சேர்க்கும்.

(பத்ரா திரும்பிப் பார்த்தாள்.)

**பத்ரா:** நன்றி செலுத்துகிறேன்.

(என்று கூறி ஓடினாள்.)

**பானு!** இன்பக் கனவு மறைந்தது!

(என்று கூறித் தவித்துச் சோலையின் வேறு புறம் போனான். அங்குத் தோழியைக் கண்டான்.)

**பானு:** உன்னிடம் ஒரு சேதி,

(தோழி, பானுவிடம் வந்து நின்றாள். பானு முள் ஒன்றை ஒடித்து ஓர் பத்திரத்தில் எழுதி)

இதை உன் தலைவியிடம் கொடு. இந்த நன்றியை எனக்குச் செய்.

[தோழி அதைப் பெற்றுத் தலைவி பத்ரா விடம் ஓடி,]

**தோழி:** அரச குமாரர் இதைக் கொடுத்தார் தங்களிடம் கொடுக்கச் சொல்லி.

(ஆச்சரியத்தோடு பத்ரா அதை வாங்கி வாசித்தாள்)

வாரா விருந்து வரக்கண்டும் உன்விழியாற்
பாராமே விட்டுப் பறந்தாலும்—சீராய் என்
நெஞ்சமட்டும் உன்னோடு நேர்ந்ததடி என்றனுக்குத்
தஞ்சமட்டும் வஞ்சிநீ தான்.

(என்று வாசித்து, இகழ்ச்சி தோன்றச் சிரித்து, அதற்கு ஓர் பதிலை எழுதித் தோழியிடம் கொடுத்தாள். தோழி பானுவை நோக்கிப் போக, அவனும் குதிரை மேல் எதிர்வந்தான். லிகிதத்தை வாசிக்கலானான்.)

மஞ்சென்று சொன்னகுழல் மங்கைநல்லாள் மக்களெல்லாம்
நஞ்சென்று சொல்லி நடுங்குகின்ற—வஞ்சகனின்
சேயை அழைப்பதுண்டோ? செம்மைபெற எண்ணுபவர்,
நோயை அழைப்பதுண்டோ? நோக்கு!

[பானு கோபத்தோடு தன் குதிரையைத் துரத்தினான்.]

## காட்சி 5. அ.

[பத்ரா, முல்லைக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தாள். தோழிகள், களையெடுத்துக் கொண்டிருந்தார்கள்.]

**தோழி :** இதைப் பாருங்களேன்! கோபத்தோடு சென்ற அரச குமாரன் குதிரையின்மேல் முறுக்காக நிமிர்ந்தபடி போனானே, அதைப் போலவே வெகு முறுக்காக இருக்கிறது இந்தக் களை.

**வேறு தோழி :** மீண்டும் அதை எனக்கு ஞாபகப்படுத்துகிறாய். அவன் போக்கு எனக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறது.

[ பத்ராவின் காதில் இவ் வார்த்தைகள் ஏறவில்லை. ]

**பத்ரா :** உயிரரும்பி மிக்க உணர்வு மலர்ந்து
பயில்புகழ் வாசம் பரப்பி—அயலார்க்கு
நன்றாகும் முல்லை நறுங்கொடியே மானிடர்கள்
ஒன்றுதல் எந்நாள் உரை?

[ என ஓர் கவிதை கூறினாள். அதைக் கேட்ட ]

**தோழி ·** பிரளய காலத்தில் அம்மணி!

[ இதற்குள் பல சேவகர்கள் பத்ராவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். தோழிக்குச் சூழ்ச்சி விளங்கிற்று. ]

**தோழி :** அம்மணி, நம்மை நோக்கித் துன்பம் விரைவாக வருகிறது!

[ ஒரு சேவகன் பத்ராவை நோக்கி அழுத்தம் திருத்தமாகக் கூறலானான் : ]

**சேவகன் .** அரசர் பேரால் உன்னை நான் சிறைப்படுத்துகிறேன். கீழ்ப்படிந்து நீ என்னுடன் வரவேண்டும்.

**பத்ரா:** நான் இழைத்த குற்றம்?

**சேவ:** அது என்னிடம் சொல்லப்படவில்லை.

**தோழி:** எம்மையும் குற்றவாளிகளாக்குங்கள்.

**சேவ:** என் வேலை அல்ல அது.

**பத்ரா:** என் தந்தை சந்த்ரசேனர் என்பதை நீர் அறிவீரா? அவர் உத்திரவின்மேல் நான் உம்முடன் வர முடியும்.

**சேவ:** ஒரு வினாடியும் தாமதிக்க முடியாது.

[ பத்ரா சேவகருடன் நடந்தாள். தோழிகள் சந்த்ரசேனரை நோக்கி ஓடினார்கள். ]

**சேவ:** இதோ இளவரசரின் சாந்தி மண்டபம். நீ பிரவேசிக்க வேண்டிய இடம்.

**பத்ரா:** நான் நீதி மன்றத்தை அடைய வேண்டியதுதான் ஞாயம்.

**சேவ:** இல்லை. இது தற்காலிக நீதி மன்றம்.

( பத்ரா பிரவேசிக்கிறாள் )

( மற்றொருபுரம் சௌம்யன் தன் தோழர் சிலருடன் ஆஸ்ரமத்தை நோக்கிப்போய்க் கொண்டிருக்கத் தோழிகள் கண்டார்கள். )

**தோழி:** நண்பரே, அதோ பத்ராவை—உமது குருவின் குமாரியை அக்ரமமாக அரச குமாரன் சேவகரை ஏவித் தன் சாந்தி மண்டபத்தில் அடைத்தான்! இந்நேரம் அவள் நிலை ஆபத்தாக முடிந்திருக்கும்,

(என்று கூறவே, சௌம்யன் துடி துடித்துத் தன் தோழர்களை அழைத்துக் கொண்டு சாந்தி மண்டபம் நோக்கி ஓடினன். தோழியரும் தொடர்ந்தார்கள்.

பத்ரா சாந்தி மண்டபத்தில் ஓர் தனி அறையில் நிறுத்தப்பட்டாள். சேவகர்கள் அகன்று வெளிப்பக்கம் போனார்கள்.)

**பானு:** பெண்ணே, நான் இந்நாட்டை ஆள நேர்ந்தால் நாட்டில் சரிநீதி செலுத்த எண்ணுகிறேன்.

**பத்ரா:** இளவரசர் நோக்கம் நன்று!

**பானு:** அதன் பொருட்டு நான் இன்றே அடையவேண்டிய ஆலோசனைக்காரி ஒருத்தி; அவள் நீ!

**பத்ரா:** உமது எண்ணம் கொடியது! யாரிடம் இதை நீர் கூறுகிறீர்?

**பானு:** பூவே! நான் அநாயாசமாக உன்னிடம்மதுவைஉண்ண நினைக்கிறேன்.

**பத்ரா:** கசக்கிப் பிழிதல் மனிதர் செயல் அல்ல அல்லவா?

**பானு:** எந்த வகையிலும் தன்நோக்கத்தைப் பூர்த்தி செய்பவன் மனிதன்.

**பத்ரா:** நான் என்ன குற்றத்திற்காக இங்கு நிறுத்தப்பட்டிருக்கிறேன்.

**பானு:** கேள் இதை. நான் உன்னையடைய எந்த அக்ரமத்தையும் செய்வேன். உயிரையும் வெறுப்பேன். அபகீர்த்தியைப் பொருட்படுத்த மாட்டேன். தங்கக் கனிக்கு மண் வெட்டப் பின் வாங்குவதுண்டா? என்னிடம் நீயே வந்துவிடு!

[பத்ரா விடுதலை பெற முயன்ருள்; பயனில்லை.]

**பத்ரா:** அந்தோ அக்ரம உலகமே!

[என்ற சத்தம் சாந்தி மண்டபத்தை முட்டியது.]

(இச்சமயம் சாந்தி மண்டபத்தின் வாயிலில் ஆஸ்ரமிகள் நின்று அறை கூவினுர்கள்.)

**ஆஸ்ரமி:** அரசகுமாரனே, அக்ரமம் செய்யும் அயோக்கியர்களே!

(இதைக் கேட்ட சேவகர்களும் பானுவும் வெளியில் ஓடி ஆஸ்ரமிகளைத் தொடர்ந்தார்கள். ஆஸ்ரமிகள் ஓடினுர்கள். எதிரிகளும் பிடிக்க ஓடலானுர்கள். இதற்குள் மண்டபத்தின் பின்புறத்தில் காத்திருந்த சௌம்யன் உட்புகுந்தான். மஞ்சத்தில் நீங்கா உயிரோடு கிடந்த பத்ராவைக் கண்டு பதைத்து,)

**சௌம்யன்:** அம்மா, இவ்வழியாக நீங்கள் சென்று மீளலாம்,

(பத்ரா எழுந்து தள்ளாடி நடந்துபோக சௌம்யனும் உடன் சென்ருன். சிறிது தூரம் கடந்தது.)

**சௌம்யன்:** அம்மா, இதோ தங்கள் ஆஸ்ரமத்திற்குப் போகும் வழி!

**பத்ரா:** இந்நாட்டில் நல்லவர் இல்லை; வீரர்கள் இல்லை, இதை என் தந்தையாரிடம் கூறுக.

**சௌம்யன் :** அம்மா, சந்த்ரசேனர் இந்நாட்டில் இருப்பதால், இந்நாட்டில் நல்லவர்களும் வீரர்களும் இருக்கிறார்கள்.

**பத்ரா :** என் உள்ளத்தை அமைதிப் படுத்துபவை இங்கு எவை உண்டு! பரந்த இந்த இயற்கைகள் என் துன்பத்தை மாற்றட்டும்.

(இதைப் பத்ரா கூறி முடித்து, அடுத்த வார்த்தைகளை உக்ரமாக ஆரம்பித்தாள்:)

உடனே என்னைவிட்டுப் போவீரா மாட்டீரா? '

(பத்ரா சிரிக்கிறாள்)

சீ! உலகம் என்ன செய்யும்? ஆடவரும் பெண்டிரும் தம்மை வீரர்களாக்கிக் கொள்ளவில்லை. படைப் பலம் அவனுக்கு!

(பின்னும் பத்ரா சிரிக்கிறாள்)

நீர் நல்லவர்! என்னோடு வாரும்.

(சிரிக்கிறாள்)

(சௌம்யன் பத்ராவின், பைத்தியத்தை எண்ணி வருந்திக் குருவிடம் கூற ஓடினான்)

## காட்சி 5. ஆ.

(சௌம்யனும் மற்றுந் தோழர்களும் சந்த்ர சேனரிடம் ஓடி வந்தார்கள்.)

**சௌம் :** சுவாமி! தங்கள் குமாரி தோழிமாருடன் பூங்காவில் இருந்த சமயம், அரச குமாரனாகிய பானு சேவகரை அனுப்பித் தங்கள் குமாரியை இழுத்துவரச் செய்தான்.

நானும் தோழரும் இதைத் தோழிகளால் அறிந்து, பானுவின் சாந்தி மண்டபம் நோக்கிஓடினேம். எதிர்த்த எனது தோழர்களைத் துரத்திக்கொண்டு பானுவும் சேவகரும் ஓடிவிட, நான்மண்டபத்தில் சென்று பார்த்தேன். தங்கள் குமாரி வாடியபூப்போல் மஞ்சத்தில் கிடக்கக் கண்டேன். அழைத்துவரும் வழியில், தங்கள் குமாரி பேசிய பேச்சுக்கள் கவர்ச்சி யுடையவை. 'இந் நாட்டில் நல்லவர் இல்லை ; வீரர்கள் இல்லை' என்று கூறினுள். நான் பிறகு ஆஸ்ரமத்துக்கு அழைத்தேன். அவள் சொல்லிய பதிலும் சிரிப்பும் அவள் அதே க்ஷணத்தில் சித்தசுவாதீனம் இழந்தாள் என்பதைக் காட்டின. இயற்கைக் காட்சிகள் என் துன்பத்தை மாற்றட்டும் என்று சொல்லிப் போனுள்.

[இவைகளை யெல்லாங் கேட்ட சந்த்ரசேனர் சிந்தனையில் ஆழ்ந்தார். குருவின் கட்டளைக்குக் காத்திருந்தார்கள் சௌம்யன் முதலியோர். நல்ல நம்பி அங்கு வந்து,]

**ந-நம்பி :** சந்த்ரசேனரே, உமது குமாரி சித்தசுவாதீனமிழந்து தனியாகப் போய்க்கொண்டிருப்பதை நான் பார்த்தேன்! அந்தப் பானு அவளை அவமானப்படுத்தியதையும் கேள்விப் பட்டேன்!

**சந்த்ர–** அன்பரே, பானுவைச் சௌம்யன் எதிர்த்தான். அதனுல் சௌம்யனுக்கு ஏற்படப் போகும் தண்டனையினின்று அவனைக் காப்பாற்ற வேண்டும்.

**ந-நம்பி :** உங்கள் பெருநோக்கம் ஒப்பற்றதாகும். ஆயினும் தங்கள் குமாரியைக் காப்பாற்ற வேண்டுவதும் முக்கியமாகும்.

**சந்த்ர :** சௌம்யா, உடனே ஆஸ்ரமவாசிகள் அனைவரையும் கூட்டிவந்து என் எதிரில் நிறுத்து.

[சௌம்யன் ஓடி ஆஸ்ரமவாசிகளைக்கூட்டிவந்து, சந்திரசேனர் எதிரில் நிறுத்தினான். அக் கூட்டத்தில் தௌம்யன் என்பவன் சௌம்யன் போலவே இருப்பதைச் சந்த்ர சேனர் கவனித்தார்.)

**சந்த்ர :** நண்பரே, இதோ நிற்கும் தௌம்யனைப் பாரும்!

**ந–நம்பி :** ஆச்சரியம்! அவன் சௌம்யன் போலவே தோன்றுகிறான். சிறிதுகூட வித்தியாசமில்லை.

**சந்த்ர :** தௌம்யா! இதைக் கேள். சௌம்யனுக்கு ஏற்படுந் தண்டனைகளை ஏற்றுக்கொள்ள நீ சித்தமாயிரு! தேச நன்மை கருதி இதைக் கூறுகிறேன்.

**சௌம்யன் :** சுவாமி! எனக்காகத் தௌம்யன் துன்பத்தை ஏற்றுக்கொள்வதை நான் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

**ந–நம்பி :** சௌம்யா, குரு வார்த்தையைத் தட்டாதே!

**சந்த்ர :** ஒப்புயர்வில்லாத உன் சேவையைத் தாய் நாடு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. சிறைக்குப் போவதைத் தௌம்யன் தடுத்துவைக்கட்டும். தௌம்யனுக்கும் கஷ்டம் வராமல் நாம் காப்பாற்றுவோம்.

**தௌம்யன் :** மக்கள் அக்ரமத்திலிருந்து மீளும் காலம் நெருங்குவதையறிந்து, நான் அளவிலாத ஆநந்தம் அடைகிறேன். சௌம்யனுக்காக நான் என்னுயிரைத்தர, ஆநந்தத்தோடு ஒப்புக் கொள்ளுகிறேன்.

**சந்த்ர :** தௌம்யா, உன் தியாக புத்திக்காக உன்னைப் பாராட்டுகிறேன். அப்பா சௌம்யா, நீ சிறிது நாட்கள் மறைந்திரு. எங்கே சென்று தாமதிக்க உத்தேசிக்கிறாய்?

[இதைக்கேட்ட சௌம்யன், தௌம்யனை நினைத்தும், தான் மறைந்து வசிக்க வேண்டும் என்று குரு சொன்னதை நினைத்தும் வருந்தி,]

சௌம் : சுவாமி! தங்கள் கட்டளையை மறுக்க முடியவில்லை. சித்ர நகர் வாசிகள் என்னை அறியமாட்டார்கள் அங்குச் சென்று தங்கியிருக்கிறேன்.

சந்த்ர : சௌம்யா, அஞ்சாதே! நான் தௌம்யனைக் காப்பேன். உன்னையும் சீக்கிரம் அழைப்பேன். நீ போய்வா.

(அவன் தௌம்யனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மறைந்தான்.)

## காட்சி 6.

இடம்: இராஜதானி நீதிமன்றத்திற்குப் போகும் வழியில் உள்ள ஓர் சாலை.

காட்சி உறுப்பினர்: தௌம்யன், சேவகர் இருவர். பானு, பத்ரா.

[இரு சேவகர்கள் துப்பாக்கி ஏந்தியவர்களாய்த் தௌம்யனை நீதிமன்றத்துக்கு அழைத்துப் போகிறார்கள்.]

1. சேவகன் : ஏன் சௌம்ய ஸ்வாமி. தாங்கள்தாம் இளவரசரை எதிர்த்த அயோக்கியனோ?

தௌம்யன் : அதென்ன மரியாதையாக ஆரம்பித்து அவமரியாதையாக முடித்தீர்களே தாங்கள் முட்டாள்மாதிரி!

1. சேவ : முட்டாள் மாதிரியா !

[என்று கூறித் தன் கையிலிருந்த துப்பாக்கியால் தௌம்யனை மோத எத்தனித்தான். துப்பாக்கி வெகு தூரம்போய் விழுந்தது. சேவகன் மண்ணைக் கவ்வியபடி வீழ்ந்தான். இத்தனையும் செய்த தௌம்யன்,]

நீ ஏன் சும்மா நிற்கிருய் ?

[என்று சொல்லி முடியுமுன் 2-வது சேவகனும் தன் துப்பாக்கியால் எதிர்க்க, அதுவும் அதே கதியை அடைந்தது. உடனே இரு சேவகரும் தௌம்யனிடம் மல்யுத்தம் ஆரம்பித்தார்கள். சேவகர்கள் தங்கள் அங்கியின் கையை இழுத்துச் சுருட்டுவதற்குள், தௌம்யனுல் அடிபட்டுச் சுழன்று விழுந்தார்கள். ]

தௌம்யன் : இங்கேயே படுத்திருங்கள் ! நானே நீதிபதி யோக்கியதையைப் பார்க்கப் போகிறேன்.

[என்று சொல்லிச் சென்ருன். அச்சமயம் பானு குதிரைமேல் அங்கு வந்தான். அடிபட்டுக் கிடக்கும் சேவகர்களைக் கண்டு,]

சேவகர்களே, இதென்ன ?

[என்று ஆச்சரியத்தோடு கேட்டான். ஒரு சேவகன் சிரமத்தோடு எழுந்து, ]

எங்கள் இருவரையும் இந்தக் கதிக்குள்ளாக்கிவிட்டு, அதோ போய்க்கொண்டிருக்கிருன் சௌம்யன்.

[குற்றவாளியாக இழுத்துச் செல்லப்படும் சௌம்யனைப் பார்க்கவந்த பானு நாணி நின்று சௌம்யனைத் தொடரலானான்.]

**பத்ரா:** என்றன் இளமையையும் ஏற்ற அழகினையும்
நன்றுதினம் காப்பாற்றி நான் மகிழும் நாதனிடம்
சென்று வழங்கிச் சிறப்படையக் காத்திருந்தேன்.
மன்னன் மகன் என்னருமை மாண்பைக்கெடுத்தானே!

[என்ற சோகம் நிறைந்த பாட்டு, பானுவின் காதில் வீழ்ந்தது. பானு, பத்ரா வெகு தூரத்தில் கூந்தல் விரிய அண்ணாந்த பார்வையுடன் நடந்து போவதைப் பார்த்தான். அவன் மனம் பதறிற்று. தன் கையிற் பற்றியிருந்த குதிரையின் கடிவாளம் அவன் கையைவிட்டு நழுகிற்று. அவன் குதிரையை மறந்தான்.]

ஐயோ பத்ரா!

[என்று அலறி அவளைத் தொடர்ந்து போனான். ஆயினும் அவள், அவன் கண்ணுக்கு மறைந்தாள். அப்போது தான் பானுவுக்குத் தன் குதிரையின் ஞாபகம் வந்தது. மீண்டும் குதிரையை நோக்கி ஓடிவந்தான். குதிரைமேல் ஏறநினைத்தான். அவள் கண்ணுக்கு மறைந்தாள் என்று வருந்தினான். ஆயினும், பிறகு அவள் சென்ற வழியாகக் குதிரையைத் தூண்டினான்.]

## காட்சி 6. அ.

[சேனாபதி ரதன் சௌம்யனைக் காண வரும்போதே, தௌம்யனைக் கண்டு தன் மகனான சௌம்யன் என்றே நினைத்து,]

அப்பனே உன்னை அழைக்கவந்த சேவகர்கள் எங்கே ? [என்று ஆவலாகக் கேட்டான்.]

**தௌம்யன் :** அவர்களா ! அதோ அங்கே தூங்குகிறார்கள். நியாயாதிபதி எங்கே இருக்கிறார்? நீர் எங்கே வந்தீர் ? ஏதாவது வேண்டுமா அல்லது நீராவது என்னிடம் மரியாதையாக நடந்து கொள்ளுகிறீரா ?

(சேனாபதிக்கு ஒன்றும் புரியாமல் விழித்து)

**சேனா :** அப்பா, நான் என்ன உன்னிடம் அவமரியாதைகாட்டக் கூடும்? புத்தி சுவாதீனமில்லையா உனக்கு ? என்னைக் கண்டதும் அன்போடு தந்தையே என்று அழைப்பாயே.

(இது கேட்டுத் தௌம்யன் விழித்து)

ஐயா, சௌம்யன் தங்கள் குமாரனா ?

(சேனாபதி தௌம்யனை உற்று நோக்கி)

அப்பா, நீ யார் ?

**தௌம் :** நான் சௌம்யன் அல்ல ; அவனைப் போன்ற உருவம் உடையேன். அதனால் சௌம்யன் ஏற்கவேண்டிய தண்டனையை, நான் ஏற்கும்படி எனது குரு ஆக்ஞாபித்தார்.

(இதைக் கேட்டதும் சேனாபதி ஆச்சரியமும் இரக்கமும் அடைந்தான். அவன் கண்களிலிருந்து நீர் பெருகிற்று.)

**சேனா :** அப்பா, அப்பா, அவனும் என் பிள்ளை. நீயும் என் பிள்ளைதான். நீ தண்டனை ஏற்கப் போவதை மாத்திரம் நான் சகிப்பேனா ? பிள்ளைக்கு என்ன இடையூறு செய்

யிருர்களோ, அந்தக் கொடிய சேவகர்கள் என்று நினைத்தல்லவா ஓடிவந்தேன். அவனுக்காக நீ தண்டனை ஏற்றுக் கொள் என்று குரு எப்படிச் சொல்லி யிருக்கலாம்.

**தௌம்:** நீங்கள் வருந்துவது சரியல்ல. தேச நலனுக்குச் சௌம்யன் வெளியில் இருக்க வேண்டும். நான் சிறையில் இருப்பதால் பாதகம் இல்லை.

**சேனு:** அப்பா, ஒன்று செய். நீ எங்கேனும் போய்ச் சிறிது காலம் மறைந்திரு.

**தௌம்:** உங்கள் அன்புக்கு நன்றி செலுத்துகிறேன், ஆயினும் நான் ஓடி மறைவதால், சௌம்யனைச் சிறைப்பத்திரம் தேடிக்கொண்டே இருக்கும். அவன் அகப்பட்டுக் கொள்ளவும் கூடும். நீதி மன்றுக்குப் போவோம், வாருங்கள்.

(என்று சொல்லி முன் நடந்தான். சேனுபதியும் தொடர்ந்தான்.)

## காட்சி 7.

**இடம்:** சித்ர நகர் மாளிகையைச் சேர்ந்த நந்தவனம்.

**காட்சி உறுப்பினர்:** நகரபதி குமாரி குமுதினி, தோழிகள், சௌம்யன்.

(குமுதினி தன் காதலன் சீக்கிரம் வருவானு என்று தன் கண்களை மூடிக்கொண்டு தரையில் வட்டக்கோடு கிழிப்பதும், அந்தக் கோட்டின் இருமுனையும் சேர்ந்திருந்தால்

வருவார் என்று திருப்தியடைவதும், அவன் வராததால் பின்னும் கோடு கிழிப்பதுமாக இருந்தாள் தன் தோழி சகிதம் !)

**குமுதினி :** இதுதான் கடைசி முறை ஆழி இழைக்கிறேன்

**தோழி :** கீழே பார்க்கிறாயே ? அதென்ன வழக்கம்.

(குமுதினி கோடிழுத்தாள்.)

**தோழி :** என்ன குமுதினி, உன் காதலர் வரமாட்டார் போலிருக்கிறதே !

(சௌம்யன் பின்புறம் வந்து குமுதினியின் கண்களை மூடினான்.)

**தோழி :** யார் ? சொல் பார்க்கலாம்.

**குமுதினி :** இவ்வளவு நேரம் என்னைக் காக்கவைத்து, என் கண்களை மூடியதால், மூடியவர் என் காதலர்.

**சௌம் :** நான் எப்போதும் சீக்கிரம் வருவதில்லையா ?

(என்று சொல்லிக்கொண்டே கையை எடுத்துவிட்டு அவள் முகத்தோடு முகம் சேர்த்தான்.)

**குமுதினி :** இதோ பாருங்கள் உங்கள் வரவை எண்ணி ஆழி இழைத்த விரல் தேய்ந்து போனதை ! என் உடம்பைத் தொட்டுப் பாருங்கள். குளிர்ந்த மலர்போல் இருக்கிறதா ? அல்லது எரியும் கனல்போலிருக்கிறதா என்று.

**சௌம்:** என் கையால் உன் முகத்தை மூடியிருப்பேனாயின், உன் மலர் போன்ற முகம் தீய்ந்து போயிருக்கும். இதோ பார் அல்லி மலர்கள்! இவற்றால் அன்றோ உன் முகத்தை மூடினேன்.

(சௌம்யனின் இரு கைகளிலும் இருந்த இருமலர்களையும் அவன் காட்ட, அவைகளைக் குமுதினி கண்டாள். அம்மலர் கருகி இருந்தன.)

**குமுதினி:** அவை என் முகத்தில் பட்டதாலல்லவா சூடு தாங்காமல் கருகின.

**சௌம்:** அல்லவே குமுதினி. என் கைகள் பட்டதால் கருகின. உன்மீது எனக்குள்ள காதலின் அளவை நான் எவ்வாறு தான் எண்பிக்கக் கடவேன்.

**குமுதினி:** உங்கள் அன்பையெல்லாம் எனக்குக் கொடுங்கள் என்றால், கொடுத்தேன் என்று பொய்கூறுவீர்கள். என்னை விட்டுப் பிரியவே கூடாது என்றால், அங்கொருவனுக்கு உயிர்ப் பிச்சை தந்தேன்; அதன் பொருட்டு இதோ போய்வந்து விடுகிறேன் என்பீர்கள், மனித சஞ்சாரமற்ற இடத்தில் நாம் இருவரும் மாத்திரம் இருந்து இன்பத்தில் ஈடுபட்டுக் கிடப்போமே என்றால், வேளையோடு உணவு எப்படிக் கிடைக்கும் என்பீர்கள். உங்களுக்கொரு பரீக்ஷை யாவது காரணமாவது?

(இச் சமயத்தில் சௌம்யனுக்கெதிரில், சற்றுத் தூரத்தில், ஓர் இளமானைக் கலைமான் ஒன்று தன் கொம்பினால் குத்தி இம்சிப்பதை அவன் கண்டான். அவனுக்கு நாட்டின் நிலை ஞாபகத்துக்கு வந்ததால்,)

பெண்ணே, அதோ பார். அந்தக் கலைமான் இந்த இளமானை இம்சிக்கிறது தன் கொம்பினால்! அரச வர்க்கம் இப்படித்தான் ஏழை மக்களை இம்சிக்கிறது.

குமுதினி: எப்போதும் எனது அரசர்மேல் குறை கூறுவது தான் உங்களுக்கு வேலை. அவர் மகுடத்தை நீங்கள் கைப்பற்றும் வரைக்கும் நிறுத்தமாட்டீர்கள்!

சௌம்: அதில் நான் வெற்றி பெற்றால் நீ வருந்துவா யல்லவா!

குமுதினி: நான் பட்டத்தரசி ஆவதற்கா?

சௌம்: நான் அந்த யுத்தத்தில் இறந்து போனால்?

குமுதினி: மெத்த சந்தோஷம்! நாம் இணைபிரியாதிருக்கலா மல்லவா மரண பூமியில்.

சௌம்: இரண்டும் வேண்டாம் எனில்?

குமுதினி: இதோ தென்றல், மலர்களின் பரிமளம், குளிர் காற்று, நீங்கள், நான், முத்தம்!

(என்று கூறிச் சௌம்யன் முகத்தோடு முகம் சேர்த்தாள். சௌம்யன் 'இச்' என்று ஓர் முத்தமிட்டான்.

குமு: ஒரு பாட்டு பாடுங்கள்.

சௌம்: பாட்டுப் பாடும் பிரச்சினையை நானல்ல பிரஸ்தா பிக்கிறது வழக்கம் முதலில்.

குமு: அப்படித்தானாகட்டுமே.

**சௌம் :** பெண்ணே ஒரு பாட்டுப் பாடு.

**குமு :** *இதற்குத்தானு!*

*( என்று சிரித்து )*

*மலரினில் வண்டு மதுவினை உண்டு*
*மறித்தும் வருமே சுவை கண்டு! நல்ல*
*மங்கை மெல்லிடையே துவண்டு*
*வருந்துகின்ருள் தெரிந்திலேயோ*
*வா, விரைந்தன்பு கொண்டு!*

## காட்சி 8.

இடம்: மணியாற்றங்கரை.

காட்சி உறுப்பினர்: சந்த்ரசேனர், சேனுபதி, உப சேனுபதிகள், பத்ரா, பானு.

*( ஒவ்வொருவராக இரவில் மணியாற்றங் கரை நோக்கி வந்தார்கள். சேனுபதியும் உபசேனுபதி ஐவரும் மணலில் உட்கார்ந் திருந்தார்கள். சிறிய பாறையின்மேல் சந்த்ர சேனர் அமர்ந்தார். )*

**சந்த்ர :** நண்பர்களே, இந்நாட்டு மக்களின் நன்மைக்காக நாம் அனைவரும் இந்த அரசாட்சியை வீழ்த்துவோம். மனப் பூர்வமாக நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

*[ அனைவரும் ஆற்றின் தண்ணீரைக் கையில் அள்ளி ]*

சத்தியமாக ஆதரிக்கிருேம்.

*(என்று கூறினுர்கள்)*

சந்த்ர: வாழ்ந்தது பிங்கல நாடு! வாழ்ந்தனர் மக்கள்!

[என்று கூறிச் சந்த்ரசேனர் உற்சாகத்தோடு எழுந்து நின்று,]

அன்பர்களே! வெற்றியை வேண்டிக் காரியத்தில் இறங்கினோம். எதுவரினும் இன்பம் என்றே ஏற்போம். உங்கள் சேனுவிரர்களை யெல்லாம், உங்கள் மேலான எண்ணத்திற்கு ஒத்துவரும்படி செய்க. நாளைய இரவு சிறையிலுள்ள தௌம்யனைச் சேனுபதி ரகசிய முறையில் திறந்து விடுக. அவனைச் சித்ர நகருக்கனுப்பிச் சௌம்யனை அழைத்து வரும்படி சொல்க. மறுநாள் சூரியோதயத்தில், போரை ஆரம்பிக்க வேண்டும். ராஜதானியைச் சேனைகள் வளைக்கட்டும். கோட்டையை முற்றுகை யிடட்டும். மாளிகையை வசப்படுத்தி அரசனையும் பானுவையும் உடற்காப்பாளரையும் விழ்த்துக. அதே நேரத்தில் கிராமங்களிலும், நகரங்களிலும் புகுந்து, கிராமபதிகளையும் நகரபதிகளையும் எதிர்த்து வீழ்த்த வேண்டும். ஏன் சாத்தியந்தானே?

மற்றவர்: வெற்றி நிச்சயம்!

[என்று அனைவரும் ஆரவாரித்தார்கள்]

பத்ரா: மானமுள்ளான் மகள் நானே!
மங்கைநலம் உள்ளவளோ! மதியே மதியே
ஈனமுள்ளான் தனக்கு நான்
இணங்கியதும் உண்டோசொல் மதியே மதியே!
தான தருமம் புரிந்தே
சற்சனர்க்கு விருந்திட்டு மதியே மதியே!
ஏனையவர் போலே நான்
இல்லறத்தை நடத்தாத எட்டியானேன்;

[இந்தச் சோகப்பாட்டுக் காற்ருேடு வந்து ஆற்றங் கரையிலுள்ள அனைவர்க்கும் பரிதாபத்தையும் எழுச்சியையும் உண்டாக்கியது. அனைவரும், கண்கொண்ட தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் பத்ராவைக் கண்டனர். அவளைப் பானு பின் தொடர்ந்து நெருங்க முயல்வதையும் பார்த்தார்சள்.]

**சேனு:** ஸ்வாமி! அந்தக் கொடும் பாம்புகளுக்கு இரையாகும்படி பெற்ற தங்கள் குமாரி அதோ! இப்போதே ஒரு வேலை நிரட்டும் உத்தரவு கொடுங்கள்! அவளை வெட்டி அங்கேயே புதைத்து விட்டு வருகிறேன்.

**சந்த்ர:** ஐயோ! ஆசைக்கொரு பெண்! கவியரசி! அவள் நிலை இப்படியா! அப்பனே தொட்ட காரியம் பெரிது; மகா ஜனங்களின் நல்வாழ்க்கையை உத்தேசித்தது; வேறு வழி இல்லை. அவளை இழந்து விடுவோம். எடுத்தகாரியம் இடையில் முறித்துக் கொள்ளலாகாது.

**சேனு:** சுவாமி, ஐயோ ஐயோ! என்ன பரிதாபம் என்ன முழுகிவிடும்?

[சேனுபதி தன் வாளில் கை வைத்தான். சந்த்ரசேனர் அவன் கையைப் பிடித்துக் கொண்டு]

**சந்த்ர:** அப்பா இந்த வரம் எனக்குக் கொடு! சிறுகல்லும் பெரியதோர் தடாகத்தைக் கலக்கும். அமைதி கொள். நாம் போவோம். திரும்பியும் பார்க்க வேண்டாம்.

[சந்த்ரசேனர், சேனுபதியைப் பிடித்த பிடியை விடாமல், உபசேனுபதிகள் சகிதம் நடந்தார் ஆஸ்ரமத்தை நோக்கி.]

## காட்சி 9.

இடம்: சந்த்ரசேனரின் ஆஸ்ரமம்.

காட்சி உறுப்பினர்: ஆஸ்ரமிகள்.

[ஆஸ்ரமவாசி ஒருவன், ஆஸ்ரமத்தின் வாசற்படியில் நின்று மற்றும் கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் வரும் ஆஸ்ரமிகளை வரவேற்றுக்கொண்டிருந்தான்.]

**1–வது ஆஸ்:** நமஸ்காரம்.

(மற்றவர்களும் நமஸ்கரித்து நிற்கிறார்கள்)

நீங்கள் அனைவரும் வெகு தூரமிருந்து வந்திருக்கிறீர்கள். சிரமம் இருக்கும். ஆதலால் நீங்கள் நேரே ஆஸ்ரமத்தின் அடுக்களைப்புறம் சென்று உணவருந்தச்சித்தமாக இருக்க வேண்டும். குருவின் பிறந்த நாள் கொண்டாட்டம் நாளைக்கு! அதுவரை அமைதியோடு ஆஸ்ரமத்தில் இருக்க வேண்டும். இது குருவின் கட்டளை!

**2–வது ஆஸ்:** நல்லது. நான் தான் வஞ்சிக் கிராமவாசி. அந்தக் கிராமபதி செய்யும்..............

**1–வது ஆஸ்:** வெளி விஷயங்கள் எவைகளைப்பற்றியும் பேசலாகாது.

**2–வது ஆஸ்:** அப்படியா.

(என்று சொல்லி உள்ளே போய்விட்டான்)

**3–வது ஆஸ்:** என்னைத் தெரிகிறதா? சோரிக் கிராமம்! சென்ற ஆண்டுதான் ஆஸ்ரமத்தை விட்டுப் போனேன்.

**1–வது ஆஸ் :** நல்லது உள்ளே போயிருங்கள்.

**4–வது ஆஸ் :** ஜனங்கட்கு ஏதாவது கதிமோக்ஷம் சீக்கிரம்.........

**1–வது ஆஸ் :** அதுபற்றி........

**4–வது ஆஸ் :** சரி சரி. மன்னிக்க வேண்டும்.

**5–வது ஆஸ் :** நான்தான் சந்த்ரநகர்! பொது விஷயங்களைப் பற்றி நான் உங்களை ஒன்றும் கேட்கவில்லை. நல்ல நம்பி பேச்சைத்தான் குரு இன்னும் கேட்...........

**1–வது ஆஸ் :** நிறுத்தும்!

[உள்ளே போய்விட்டான். மற்றவர்களும் ஆஸ்ரமத்தில் நுழைந்தார்கள்.]

**6–வது ஆஸ் :** உள் நாட்டுப் போர் துவக்கப் போவதாகக் கேள்வி.

**1–வது ஆஸ் :** இதென்ன தோழரே, வெளி விஷயத்தைப் பற்றி எந்தப் பிரஸ்தாபமும் கூடாதென்றால், பிதற்றுகிறீரே.

**6–வது ஆஸ் :** பின்னை ஏன் ஆஸ்ரமிகள் அனைவரும் அழைக்கப் படுகிறார்கள்?—இது கூடக் கேட்கக் கூடாதோ? என்னிடம் சொன்னால் என்ன?

**1–வது ஆஸ் :** அந்தோ! குருவின் பகைவரா நீர்? தயவு செய்து உள்ளே போம்.

**6–வது ஆஸ் :** வேறொன்றுமில்லை. சேனாபதி நமக்கு ஒத்திருக்கிறாரா என்ற சந்தேகம்.

**1-வது ஆஸ் :** குருவின் ஆணையை மீறுகிறீர்.

**6-வது ஆஸ் :** இல்லை.

**1-வது ஆஸ் :** இல்லை யென்றால் உள்ளே போக வேண்டு மல்லவா ?

(போனான்)

## காட்சி 10.

இடம் : ராஜதானி மாளிகையில் அந்தப் புரத்தின் தாழ் வாரம்.

காட்சி உறுப்பினர் : ரவிகேது மன்னன், அஞ்சுகம், நல்லநம்பி, பானு, பிறர்.

*[ரவிகேது மன்னன் அலங்காரமான மஞ்சத்தில் சாய்ந்திருந்தான். அவன் மடியில் அஞ்சுகம் தலைவைத்து அரசன் வாயில் வெற்றிலைச் சுருள் கொடுத்திருந்தாள். தோழி ஒருத்தி விசிறிக்கொண்டிருந்தாள். அச் சமயம் அரசனைக் காணுங் கருத்தால், நல்லநம்பி அவசரமாக வந்துகொண்டிருந் தார். தலைவாசலில் சேவகன் தூங்கிக்கொண் டிருந்தான்,]*

**ந–நம்பி :** சேவகரே !

*[இதைக் கேட்டு விழித்த சேவகன் கொட் டாவிக் கெதிரில் விரலை நொடித்து,]*

என்ன செய்தி ? நில்லுங்கள்.

**ந–நம்பி :** நான் அவசரமாக அரசரைக் காணவேண்டும்.

**சேவ :** அப்படியா,

[என்று சொல்லி மீண்டும் கொட்டாவி விட்டான்.]

ந—நம்பி : நேரமாகிறது. நான் போகிறேன்.

சேவ : நில்லும் என்ன சங்கதி?

ந—நம்பி : நான் அவசரமாக அரசரைக் காண வேண்டுமென்றேனே.

சேவ : என்னை உத்தரவு கேட்கவேண்டுமா வேண்டாமா? நீரே சொல்லும்.

(மீண்டும் கொட்டாவி)

ந—நம்பி : ஆம் உத்தரவு கொடும்.

சேவ : அப்படிக் கேளும் அதுதானே முறை

(கொட்டாவி விட்டுக் கொண்டே)

கட்டாயம் நீங்கள் போக வேண்டுமா?

ந—நம்பி : ஆமப்பா. அவசரமாகப் போக வேண்டும்.

சேவ : அப்படிச் சொல்லும். இரண்டுமாதத்துக்கொரு தடவை மூன்று மாதத்துக்கொரு தடவை, ஒன்று அல்லது இரண்டு கொட்டாவி எனக்கு வருவதுண்டு. அப்படி வரும் பக்ஷத்தில் அதற்கு என்ன செய்கிறது?

[என்று சொல்லிக் கொட்டாவி விடுத்து விரல் நொடித்தான். நல்ல நம்பிக்கு அதிக அவசரம். அவர் சேவகன் அதிகாரத்தைப் பொருட்படுத்தாமல்உள்ளேபோய்விட்டார்]

சேவகன் அவரை அதட்டி நிறுத்த வாய் எடுத்தான். அதற்குள் கொட்டாவி வந்து விட்டது. அதனால் அவன் தன் கையால் போகாதீர் என்று சைகை காட்டினான். கொட்டாவி தீர்ந்து திரும்பிப் பார்த்தான். அவர் உள்ளே போய்விட்டதை அறிந்தான். மீண்டும் கொட்டாவி விட்டுப் படுத்துக் கொண்டான்.]

**ந—நம்பி :** நண்பரே, உமது அரசாட்சியைச் சந்த்ரசேனரிடம் ஒப்படைத்து விட்டதாக நீர் ஓர் ப்ரகடனம் வெளியிட்டு விட வேண்டும்.

**அரசன் :** ஏன்? அமருங்கள்.

**ந—நம்பி :** அல்லது சந்த்ரசேனரை அடைந்து, தர்ம வழியில் இனி ஆட்சி நடத்துவதாக உறுதி கூறி, அவரைச் சமாதானப் படுத்த வேண்டும். நீர் என் நண்பர் என்பதற்காகவும், உம்மைச் சேர்ந்தவர்கட்கோ உமக்கோ இம்சை ஏற்படக் கூடாது என்பதற்காகவும் நான் இதைக் கூறுகிறேன். இன்னும் கேட்பீர். நாட்டு மக்கள் உமக்கு ஒத்திருக்கவில்லை. உமது சேனாபதியும், உபசேனாபதிகளும். சேனா வீரர்களும் உம்மை எதிர்க்கச் சித்தமாயிருக்கின்றனர். நாட்டு மக்களையும் சைன்யத்தையும் சந்த்ரசேனர் உமக்கு விரோதமாகக் கிளப்பி விட்டு விட்டார். நாளை போர் ஆரம்பமாகிறது. நீரும், பானுவும் உயிரிழக்கப் போவது உண்மை என்று எனக்குத் தோன்றுகிறது. உமக்காகப் பரிந்து வருபவர்கள் அனைவரும் உயிரிழக்க வேண்டும். நினைக்கும் போதே சகிக்க முடியாத துன்பம் உண்டாகிறது. நண்பரே, நான் சொன்னபடி செய்ய மாட்டீரா?

[இது கேட்ட அரசன் ப்ரமைகொண்டவன் போல் விழித்து]

நண்பரே, இவ்வளவும் உண்மையாக இருக்கலாம். ஆயினும் சந்த்ரசேனரிடம் நான் பணிந்துபோவதும், நானே என் ஆட்சியை விடுவதும் சரியென்று தோன்றவில்லை. இராஜதானியில் எனக்குப் பலமில்லை என்பது வாஸ்தவமே. குன்றநகர், எதிரிகளால் ஜெயிக்க முடியாதது. நான் அங்குத் தப்பிப்போக வழி தேடுகிறேன். அங்கிருந்து மற்ற நகர்ப்படைகளைச் சேர்த்துக்கொண்டு சந்த்ரசேனரை எதிர்க்க முடியும்.

**ந-நம்பி :** கொலையும் இம்சையும் உள்ள யுத்தம் இல்லாமற் செய்ய வழி யில்லையா? அங்கிருந்தும் படை சேர்ப்பது தானா உம் உத்தேசம்?

**அரசன் :** குன்ற நகரிலிருந்து யோசிப்போம்.

**ந-நம்பி :** நன்று. ஆனால் நீர், மாளிகையின் பத்து முழ தூரத்தின் கிழக்கே அமைந்த நில அறைக் கதவைத் திறந்து கொண்டு போவீரானால், கபில ஏரிக்கரையண்டை உம்மைச் சேர்க்கும். தப்ப வழி தேடும் சீக்கிரம்.

[இச்சமயம் பானு வந்தான்]

**பானு :** தந்தையே, நாளை உள் நாட்டுப் போர் துவக்க இருக்கிறார் சந்த்ரசேனர் எனக் கேள்வி.

**அரசன் .** பிள்ளாய், நீ எங்கும் போகாதே. என்னுடன் இரு. தப்பிப் போக வேண்டும் நாம்.

[இதைக் கேட்ட பானுவின் மனக்கண்ணில் பத்ராவின் பரிதாபத் தோற்றம் தோன்றவே,]

என்னைப்பற்றிக் கவலை வேண்டாம். நான் வந்து சேருகிறேன். உடனே நீங்கள் புறப்படலாம். எங்குப் போக உத்தேசம்?

**அரசன் :** அப்பா, குன்றநகர் போக நினைக்கிறேன்.

**பானு :** ஐயோ மோசம் போகிறீர்கள். குன்ற நகரபதி உங்களை மோசஞ் செய்யக் கூடும். அவன் சம்பந்தத்தை நீங்கள் முன்னொரு காலத்தில் வெறுத்தீரல்லவா.

**அரசன் :** அபயம் அடைந்த தன் தலைவனை விலக்குவானா?

**பானு :** அப்படியானால் உடனே பிரயத்தனப் படுங்கள். இன்றிரவுக்குள் நீங்கள் குன்ற நகரில் போய்ச்சேர்ந்து விட வேண்டும். நான் இதோ வருகிறேன்.

**ந-நம்பி :** நான் சென்று வருகிறேன்.

(இருவரும் போனார்கள்.)

**அஞ்சுகம் :** என்கதி அதோகதிதானா?

**அரசன் :** அஞ்சுகமே என்னுடன் நீயும் வரவேண்டியதுதானே.

**அஞ்சுகம் :** காதலின் இலக்கணத்தை எனக்குக் கூறுகின்றீர்கள் போலிருக்கிறது. நீர் நாட்டினரை விரோதித்துக் கொண்டு ஓடுகிறீர். நானும் அப்படித்தானோ? எனக்கு வேண்டிய திரவியத்தையும் பூஷணங்களையும் இப்படி வைக்கிறீரா? சந்த்ரசேனரை நோக்கிப் போகவா!

[இதைக் கேட்டுத் திடுக்கிட்டு]

**அரசன் :** அஞ்சுகம்! நீ கேட்டது தருகிறேன்; என்னுடன் வா.

**அஞ்சுகம் :** அது முடியாது. இங்கேதானிருக்கவேண்டும். கேட்டதை வையும்.

[அரசன் சேவகரை நோக்கிச் சைகைகாட்ட, அவர்கள் அஞ்சுகத்தைப் பிடிக்க மறுக்கிறார்கள். திடுக்கிட்டு,]

**அரசன் :** உம்மையும் சந்த்ரசேனன் பதப்படுத்தி வைத்திருக்கிறுன !

[என்று முணுமுணுத்தான். இதைக் கூர்ந்து கவனித்த தாசி அஞ்சுகம்.]

ஓகோ ! என்னைக்கொல்ல வழி தேடுகிறீரா ? அதற்குள் அடே பாவி, உன்னுயிருக்கே வழி தேடுகிறேன்.

[என்று சொல்லி வேகமாக வெளியில் ஓடினுள். அரசன் நடுங்கிப் பதைத்து அந்தப்புரத்தில் நுழைந்து]

அந்தத் தாசி நமது நோக்கத்தைச் சந்த்ரசேனரிடம் தெரிவிக்குமுன், நிலவறை மார்க்கம் தப்பிப் போவோம்.

(என்று கூச்சலிட்டு ஓடினுன்.)

## காட்சி 10. அ.

[தலை வாசற் காவலன் கொட்டாவி விட்டபடி உட்கார்ந்திருந்தான். அந்த வழியாகப் பரபரப்புடன் ஓடிய தாசி அஞ்சுகத்தைப் பார்த்ததும், அவனுக்கு ஏற்பட்ட ஆச்சரியம் அவன் கொட்டாவியையும் நிறுத்தியது.]

**சேவகன் :** அந்தச் சேனுபதி...........

[என்று கூறி 'உங்கள்மேல் கோபமாக இருப்பார்' என்று கூறுமுன் அஞ்சுகம்]

ஆம். அவர் எங்கே ?

[என்று கேட்டாள். உடனே சேவகனும் நிதானித்து]

அவரைத்தானே காணவேண்டும் ?

**அஞ்சுகம் :** கட்டாயம் நான் அவரையாவது, சந்த்ரசேனரை யாவது காணவேண்டும்.

**சேவகன் :** நானும் அவர்களைத்தான் காணவேண்டும். அவர்களிடம் நீங்கள் அவசரமாக என்ன சொல்லவேண்டும் ?

**அஞ்சுகம் :** இந்த அக்ரமக்கார அரசன் நிலவறை மார்க்கமாக தப்பி ஓடுகிருன்,

**சேவகன் :** அடி பாவி !

(என்று சொல்லி அவள்மேல் பாய்ந்து அவளைப் பிடிக்க முயன்ருன். ஆயினும் அவள் அங்கிருந்த கத்தியைத் தாவி எடுத்துச் சேவகனெதிர் காட்டித் தப்பி ஓடினுள். சேவகன் துப்பாக்கியால் அவளைச் சுட்டுவிழ்த்தினுன். இச் சத்தங் கேட்டு உள்ளிருந்த சேவகன் ஓடி வந்து, தனக்குள்ளே சொல்லிக் கொள்வான் :)

அக்ரமத்தின் கடைசிப் பலி ! ஆயினும் நாளைய அறப் போரின் முதற் கொலை !

## காட்சி 11

இடம்: சித்ரநகர் அந்தப்புரம்.

காட்சி உறுப்பினர்: குமுதினி, பானுமதி, நல்ல நம்பி.

(குமுதினி தன் அந்தப் புரத்தில் நிலைக் கண்ணாடி எதிரில் நின்று தன் முகத்தைத் திருத்திக்கொண்டே பாடினாள்.)

உயர்வாழ் வென்பது காதலினாலே
உண்டாகும் மனமே இப்புவிமேலே!
அயர்வும் பொய்ம்மையும் இவ்விடம்யார்க்கும்
அன்பெனும் ஒன்றேதான் நீர்க்கும்!
இமயமா மலையை வீரன்தோள் மோதல்
எழில்மாதர் மேலவர்வைத்த மெய்க் காதல்!
தமியனாய் ஆழ்கடலில் முத்துக் குளிப்பான்
தன்கூலி மனைவிபால் தந்தே களிப்பான்.

(இதைக் காதில் வாங்கியபடி நல்ல நம்பி, பெண்ணுருவோடு தன்னுடன் வரும் பானுமதி என்னும் பானுவை அழைத்துக் கொண்டு. குமுதினியின் அந்தப் புரத்தில் நுழைந்தார்.)

குமுதினி: வரவேண்டும். அரசரும் சுற்றத்தாரும் சௌக்யமா?

[என்று ஆவலாய்க்கேட்டு உட்கார்ந்தாள். நல்ல நம்பியையும் பானுமதியையும் உட்காரும்படி காட்டி,]

**ந–நம்பி:** குமுதினி, அரசர் காலமெல்லாம் இழைத்த அக்ர மங்களின் பயனுகச் சந்த்ரசேனரும் சேனுபதியும், அரச ருக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டார்கள். இந் நேரம் இராஜதானி என்ன ஆயிற்ரே? இந்த மங்கையைப் பார். இவள் பெயர் பானுமதி! இவள் அரசரின் சொந்தக்காரி! இவள் உன் அடைக்கலம். ரகசிய முறையில் இவளே நீ காப்பாற்றிக் கொடு.

**குமுதினி:** ஐயோ! அவர் ஆணையாலல்லவா என் தந்தை இந்நகரின் ஆட்சியை நடாத்தும் கௌரவத்தை அடைந்தார். அம்மா, நீ என்னிடம் சவுக்கியமாக இருக்கலாம். அரசருக்கு ஆபத்தா! என் தந்தை இங்கு இருப்பது சரியா?

**ந–நம்பி:** வேண்டாம் வேண்டாம். அரசர் அழைத்தாலும் போகாமல் தடுத்துவிடு உன் தந்தையை! நான்சொன்ன தாகவும் அவரிடம் கூறு. நான் இங்குத் தாமதிக்க முடியாது. இராஜதானி நோக்கிப்போகிறேன். பானுமதி பத்திரம்!

**குமுதினி:** இன்றிருந்து நாளேக்குப் போகலாகாதா?

**ந–நம்பி:** உன் அன்பு நன்று! போய் வருகிறேன்.

(போகிருர்.)

## காட்சி 11. ஆ.

(சித்ரநகரில், தௌம்யன் பரபரப்புடன் முக்காடணிந்து, சௌம்யன் விடுதியில் நுழைந்தான்.)

**தௌம் :** ஸௌம்யா ! ஓடு இராஜதானியை நோக்கி ! இதோ இரவு கழிகிறது. சூரியோதயத்தின் ஆரம்பத்திலேயே போர் ஆரம்பிக்கப்படும்.

**ஸௌம் :** தௌம்யா, உனக்கென்ன நேர்ந்தது எனக்காக? நீ என்னென்ன துன்பப்பட்டாயோ !

**தௌம் :** என்ன உதை தெரியுமா ?

**ஸௌம் :** அந்தோ !

**தௌம் :** ......உன் பேரால்......

**ஸௌம் :** நான் பாவி !

**தௌம் :** ......அந்தச்சேவகருக்குக் கொடுத்தது!

**ஸௌம்:** என்ன சேவகருக்கா? என் அழுகையைச் சிரிப்பாக்கி விட்டாயே தௌம்யா !

**தௌம் :** என்னைப் பிடித்துச் சென்றார்கள் இரு சேவகர்கள் வழியில் என்னை இழிவாகப் பேசினார்கள். அடித்துக் கிடத்திச் சென்றேன். பிறகு சேனாபதி, தன் பிள்ளையைத் தேடி வந்தார். சேனாபதிக்கும் ஸௌம்யனுக்கும் உள்ள பாத்யம் அதற்குமுன் எனக்குத் தெரியாது அவரிடம் ஆரம்பித்தேன். அவர் மலைத்து, மகனே உனக்குச் சுவாதீன சித்தமும் இல்லையா என்றார், நான் உண்மையைக் கூறினேன். பிறகு நான் சிறையிலடைக்கப்பட்டேன். நாளைக்கு நாட்டுக்கு விடுதலை ! உன்னிடம் ஓடிவந்தேன் குருவின் ஆணைப்படி.

**ஸௌம் :** ஒரு குதிரைகூட இல்லை ஏறி விரைவாகப் போக.

**தௌம் :** மெய்தானா ! உன் மனதில் என்னதான் இருக்கிறது ?

சௌம்: பெரியதோர் உற்சாகம்!

தௌம்: ஏறிப்போ அதன்மேல்!

சௌம்: உண்மை கூறினாய். இதோ நான் விரைவாகச் சென்று......இங்கு எனக்கொரு நண்பன்......அவனிடம் விடைபெற்று வந்து விடுகிறேன்.

தௌம்: இதென்ன உன் குதிரை உன்னைப் பின்னோக்கித் தள்ளுகிறது? நண்பன் கூடவா சித்ரநகரில்? இருப்பினும் குருவின் ஆணையைவிட அந்த நட்புப் பெரிதா? நீ விழிக்கும் விழியில் எனக்கு அவநம்பிக்கை தோன்றுகிறதே!

சௌம்: அன்பனே, உன்னிடம் மறைப்பது சரியன்று! இந்த நகரபதியின் குமாரி குமுதினி, என்னைத் தன் உயிரைவிட உயர்வாக எண்ணியிருக்கிறாள்.

தௌம்: விரோதியின் மகள் உன் காதலி போலும்! பகைவர் கூட்டத்தை ஒழிப்பதென்ற நியதிக்கு உன் காதல் தடையல்லவா?

சௌம்: நண்பனே, பகைவன் தோட்டத்துப் பூங்கொத்து, அண்டை வீட்டுக்காரனை மகிழ்விக்காதா?

[இதைக்கேட்ட தௌம்யன் புன்சிரிப்புக் கொண்டு சும்மா இருந்தான்]

சௌம்: இதோ வந்துவிடுகிறேன்.

(என்று போனான்)

## காட்சி 11. ஆ.

[குமுதினியும் பானுமதியும் அந்தப்புரத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள்.]

**பானு:** இல்லை, அரசர் உண்மையில் ஆதரவற்றிருக்கிருர் !

[இச் சமயம் சௌம்யன் உட்புகுந்தான். சௌம்யனைக் கண்ட பானுமதி விலகிப் போனுள்.]

**சௌம்:** குமுதினி, எனக்கு விடைகொடு ! என்னை என் குரு சந்த்ரசேனர் அழைத்தார். உடனே திரும்புவேன்,

**குமுதி:** காதலரே, என்னைப் பிரிந்தால் நான் உயிர் தரிக்க மாட்டேன். நீங்கள் போருக்குப் போகிறீர்கள் ; என்னை விட்டுப் பிரிகிறீர்கள் இந்த இரண்டு காரணத்தால் !

[சௌம்யன் திகைத்தான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனுகி,]

**சௌம்:** என்னை அழைக்க வந்தவனை அனுப்பிவிட்டு வருகிறேன்.

**குமுதி;** நீங்கள் வரும்வழியில் என் விழிவைத்துக் காத்திருப்பேன்.

**சௌம்:** நம்பியிரு

[என்று சொல்லி விரைந்து போனுன். குமுதினி வாசற்படியில் தனித்து நின்ருள். அவள் மனம் சௌம்யனைத் தொடர்ந்தது. அச்சமயம் அவளுக்குப் பின்புறமிருந்து,]

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI.
43489
O31:2M9:1:2

குமுதினி !

[என்ற ஓர் சத்தம் கேட்டது. தன் காதலன் தானென்று அவள் மனதில் மின்னல் தோன்றுவதுபோல் தோன்றி, அது மறையும் நேரத்துக்குள் பானுமதிதான் என்ற முடிவுக்கு வந்தாள்.]

குமுதி : என்னிடம் நீ என்ன பேச நினைக்கிருய் ?

பானு : சௌம்யன் அழகுடையவன்.

குமுதி : உண்மை.

பானு : அவன் நமது விரோதி !

குமுதி : உன்னை யார் கேட்டது ?

பானு : சௌம்யனுக்கு அஞ்சியே என் உயிர் உன்னிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டிருக்கிறது.

குமு : உன் நிலைக்கு நான் பரிதாபப் படுகிறேன்.

பானு : காலமெல்லாம் உன் தந்தைக்குச் சகாயம் புரிந்து வரும் அரச வம்சத்தில் பிறந்த ஒருவனுக்கு நீ உன்னைத் தந்து கௌரவிக்கலாம்.

[குமுதினிக்கு இதில் ஓர் எழுத்துக்கூடக் காதில் விழவில்லை.]

பானு : நான் கூப்பிடுகிறேனே !

(அவள் காதில் விழவில்லை)

நான் கூப்பிடுகிறேனே.

[என்று பின்னும் உரக்கக் கூறினுன்]

**குமு:** என் காதலரைச் சென்று?

**பானு:** இல்லை. அரசவம்சத்தில் தோன்றிய ஓர் சுந்தர புருஷனை!

**குமு:** ஏன் எப்போது?

**பானு:** நீ சௌம்யனை விலக்க வேண்டாம்.

**குமு:** யார் சொன்னது?

**பானு:** அவன் அழகு உன்னை அள்ளிக் கொள்ளும்.

**குமு:** அள்ளிக் கொண்டது!

**பானு:** அந்த அரச குமாரன் உன்மீது வைத்த காதலால் கரைந்து போகிருன்.

**குமு:** அடங்கு! அடைக்கலப் பெண்ணுக்கு ஏன் இந்த வீண் வார்த்தைகள்!

**பானு:** குமுதினி என்னைப்பார்!

[என்று கூறித் தன் பெண்ணுடைகளை நீக்கி அரசகுமாரனுக நின்ருன். குமுதினி வியப்பும் கோபமும் கொண்டாள்.]

**குமுதி:** நீர் அரசகுமாரர். ஆதலால் உன்னை மன்னிக்கிறேன். ஒன்று உறுதி. உன்னைக் காதலிக்கவில்லை நான் என் காதலருக்காக வாழ்வதால்!

[இருவரிடமும் மௌனம் குடிகொண்டது. அவள் விழி சௌம்யன் வரும் பாதையில் போயிற்று.]

## காட்சி 11. இ.

[விரைவாக ஓடிவந்த சௌம்யனிடம் தௌம்யன் கிண்டலாக,]

என்ன உத்தரவுக்கு அருள் சுரந்ததா?

**சௌம்:** இல்லை. என்னைப் பிரிந்தால் அவள் செத்துப் போவாள். இன்னொருதரம் நீ எனக்காகச் சிரமப்பட வேண்டும்.

**தௌம்:** நான் சித்தம். ஆனால் உடனே போகவேண்டும் இராஜதானிக்கு நீ.

**சௌம்:** அதற்காகத்தான்; எனக்குப் பதிலாக நீ அவளுடன் இரு. என்னைப் போலிருக்கிறயே!

**தௌம்:** உண்மையாகவா?

**சௌம்:** அதனுலென்ன?

**சௌம்:** இரு என் சிரிப்பை முடித்துக்கொண்டு வருகிறேன்.

(சிரித்துக்கொண்டே பேசுகிறுன்)

பழகிய நாய் விளையாட்டுக்குக் கடிக்கவரும்; அதனேடு பழக்கமில்லாத மனிதன் ஐயையோ என்று கதறிவிட்டால்? அன்றைக்கு நான் கொடுத்ததற்குப் பதிலாகக் கொடு என்று அவள் காதல் முத்தத்தைக் குறித்துக் கேட்பாள்;

நான் தயிர் வடைக்குப் பதிலாக உளுத்தவடை கொடுக்கப் போனுல்? நீ அன்றைக்குச் சொல்லி நிறுத்திய கதையின் தொடர்ச்சியை அவள் என்னைக் கேட்பாள்; அதற்கு நான் மருள மருள விழிப்பேனுனல்? என்ன ஆகும் நீ சொல்வது பொருத்தமாக இருக்கிறதா?

**சௌம்:** தௌம்யா, எனக்கு வேறு வழியில்லை. உன் சமயோசித புத்திக்கு அப்பாலாக ஒன்றும் நடந்துவிடாது.

**தௌம்:** ஐயையோ, உனக்காக நான் சிறையில் இருந்தேன். இப்போது நீ காட்டும் சிறைச்சாலை மிக மோசமானது!

**சௌம்:** நேராக மாளிகைக்குப்போ! பளிங்குப் பதுமைகள் இருபக்கமும் நிறுத்தியுள்ள அறைக்குப் பக்கத்தறை குமுதினியுடையது. குமுதினியின் தோழி பொன்னியின் அறை இப்பக்கம் உள்ளது. குமுதினியுடன் ஓர் அழகிய பெண் இருக்கிருள். அவள்மீது உனக்குக் காதல் உண்டானுல் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாதே நான் வருகிற வரைக்கும். நான் போகிறேன்.

[என்று சொல்லிச் சௌம்யன் போனுன். தௌம்யன் மலைத்து நின்று பெருமூச்சுடன் புறப்பட்டான் மாளிகைக்கு.]

## காட்சி 11. ஈ.

[தௌம்யன் பளிங்குப் பதுமை அடையாளமுள்ள அறையைக் கண்டுபிடித்தானுயினும், இப்புறத்தின் அறை வாசற்படியில் நின்றிருந்த பொன்னியைக் குமுதினி என்று நினைத்து.]

குமுதினி! (என்றுன்.)

**பொன்னி:** நானா குமுதினி?

**தௌம்:** வாய் தவறிவிட்டேன், குமுதினி எங்கே!

**பொன்னி:** குமுதினியை இந்த அறையில்தானா தேடுவது?

**தௌம்:** நீ ஒரு வாயாடி! இந்த அறையில் அவள் இருப்ப தாகவா கேட்டேன்.

[என்று கூறி அடுத்த அறையில் நுழைந் தான். வழி பார்த்திருந்த குமுதினி தௌம் யனைக் கண்டதும்,]

நீங்கள் சொல்லிப் போனதென்ன? செய்ததென்ன?

[என்று கூறிச் சீக்கிரம் வருவதாகச் சொல்லித் தாமதித்து வந்ததுபற்றி வருத்த மாய்க் கேட்டாள்.]

**தௌம்:** ஆம். நான் இராஜதானிக்குப்போய் வருவதாகவே சொன்னேன்; உன்னைவிட்டுப் பிரியமனமில்லை.

**குமுதி:** நீங்கள் அப்படிச் சொல்லவில்லையே. சீக்கிரம் வருவதாகச் சொல்லி, நேரம் கழித்து வந்தீர்கள்.

[தௌம்யன் மனம்படாதபாடு பட்டது.]

**குமுதி:** உட்காருங்கள்!

[தௌம்யன், இரண்டு ஆசனங்களில் தான் உட்கார வேண்டிய ஆசனம் இன்னதென்று தெரிந்து கொள்வதற்காக,]

நீ உட்கார்!

என்று கூறினான்.

['செளம்யன் மடியில்தான் குமுதினி உட்கார்வது' இந்த வழக்கத்திற்கு விரோதமாக இவன் வார்த்தையிருந்ததால்குமுதினி]

நான் உங்கள் எதிரியின் மகள் என்ற உணர்வை, உம்மை அழைக்க வந்தவர் உண்டாக்கி விட்டாரா?

(என்று வருத்தமாகக் கேட்டுப் பின்னும்)

உங்களை நான் வேண்டிக்கொண்டதென்ன?

(என்று கேடடாள்.)

[இதற்குத் தௌம்யன் 'என்னை விட்டுப் பிரியலாகாது என்று வேண்டினாய்' என்று சொல்வதற்குப் பதிலாக.]

ஆம். என்னை முதலில் அமரச்சொன்னாய்.

[என்று பதில் கூறினான். குமுதினிக்கு, இவன் மனம் இராஜதானியில் இருக்கிறது என்று நினைத்து.]

இப்போது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்?

(என்று கேட்டாள்.)

நான் பொன்னியின் வீட்டில்தான் இருக்கிறேன்.

[என, குமுதினி என்பதற்குப் பதிலாகப் பொன்னி என்ற பதத்தை உச்சரித்து விட்டான். குமுதினிக்குத் தூக்கிவாரிப் போட்

டது போலிருந்தது. அவன் தன் தோழியாகிய பொன்னியின் மையலால்தான் உளறுகிருன் என நினைத்து,]

அப்படியா?

[என்றுகூறித் தரையிற் புரண்டு அழுதாள். தௌம்யனுக்குத் தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டதால், எப்படியாவது தப்பி ஓடுவதே உசிதம் என்று கருதி நழுகினுன். தான் ஊடியபோது தன் காதலன் ஊடல் நீக்க முயலாமல் நழுகுவது கண்ட குமுதினி, பின்னும் அதிகமாகப் புரண்டழுதாள். நழுகிய தௌம்யனே வழி தவறி மாளிகையின் பின்புறமாகச் சென்ருன். வழியில் இருந்த பணிப் பெண்கள் குமுதினியின் காதலன் என்பதுபற்றி ஒன்றும் சொல்லாவிடினும் பின்னிருந்து கேலியாக நகைத்தார்கள். இதைத் தௌம்யன் ஊகித்துத் திரும்பினுன்.]

**பணிப்பெண்:** நீங்கள் எங்கே போகவேண்டும்?

**தௌம்:** நான் அவசரமாக என் விடுதிக்குப் போகவேண்டும்.

[இதுகேட்ட பணிப்பெண் குலுக்கென்று நகைத்தாள். தௌம்யன் விரைந்து சென்ருன். மாளிகையின் புறத்திலுள்ள சிங்கார வனத்தை அடைந்தான். அந்த இரவில் நக்ஷத்திர வெளிச்சத்தில் பொன்னி, தன் அண்ணனிடம் ஏதோ ரகசியம் பேசிக்கொண்டிருந்தாள். அவன் தௌம்யனைக் கண்டதும்,

உங்கள் வார்த்தையின் படி தான் காத்திருக்கிறேன்.

[என்று சொன்னான். இந்த மழைக்கு எந்தக் குடையைப் பிடிப்பது என்று தோன்றாமல் தௌம்யன்,]

வாலிபனே, நீ பொன்னியிடம் இந்த இன்ப இரவில் பேசவேண்டிய காதல் வார்த்தைகளைப் பேசி முடி; நாளைக்கு ஆகட்டும்.

(என்று கூறினான்.)

[இவ் வார்த்தைகள் பொன்னிக்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணி விட்டது. ஆயினும் பரிகாசத்துக்குச் சொல்லியிருக்கலாம் என்றெண்ணிச் சும்மா இருந்துவிட்டாள். தௌம்யனுக்குப் பூங்காவைவிட்டு வெளிச்செல்ல வழி தெரியாமையால்,]

பொன்னி, என்னுடன் தெருவரைக்கும் வா.

[என்று சொல்ல, அவளும் அவனுடன் வந்தாள். ஆயினும் தௌம்யன் போகும் வழியே பொன்னி போய்க்கொண்டிருந்தாள். தௌம்யனோ சோலையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அச்சமயம் குமுதினி சோலைப்பக்கம் வந்தாள். அவளுக்குச் சந்தேகம் பலப்பட்டது. கோபத்தோடு பார்த்தாள். தௌம்யனும் பொன்னியும், குமுதினியைப் பார்த்தார்கள். குமுதினி திடீரென உள்ளே ஓடி வாள்ஒன்றைத் தூக்கிவந்தாள். இதைக்கண்ட இருவரும் ஓட எத்தனிக்கையில்,]

தௌம் : தெருவுக்கு எப்படிப் போவது ?

*(என்று பொன்னியைப் பதைப்புடன் கேட்டான். அவள் சுட்டிக் காட்டினுள். ஓடி மறைந்தான் தௌம்யன்.)*

## காட்சி 12

இடம் : பிங்கல நாட்டின் இராஜதானி.

காட்சி உறுப்பினர் : சேனுபதி, சேனுவீரர், சந்த்ரசேனர், நல்லநம்பி, ஆட்கள், பிறர்.

*[பிங்கல நாட்டின் இராஜதானி முழுதும் படையின் நடமாட்டமாயிருந்தது. சேனுபதியும் சௌம்யனும், துப்பாக்கிப் படையுடன் அரண்மனையின் உள்ளே நுழைகிருர்கள். ஒருபுறம் சேனுவீரர்கள், கோட்டையின்மீது பறக்கும் சிங்கக் கொடியைக் கிழித்து எறிகிருர்கள்.*

*அரண்மனையில் அரசனுடைய தற்காப்புப் படை அஞ்சிப் பணிகிறது. சேனுபதியும் சௌம்யனும், அரசன் முதலிய எவரையும் அரண்மனையில் காணுமையால் ஆச்சரியம் அடைகிருர்கள்.]*

சேனு : சௌம்யா, என்ன ஆச்சர்யம் ! அரசன் இல்லை, பானு இல்லை. மற்றும் அரச குடும்பத்தினர் எவருமே காணப்படவில்லை.

சௌம் : சேவகனே. நீ அரசர் அந்தப்புரத்தின் காவற்காரன் அல்லவா ?

**சேவகன் :** ஆம்! அதோ அந்த வெள்ளித் தூணின் பக்கத்தில் பாருங்கள் நிலவறை! அதன் வழியாக நேற்றே அரசன் முதலியோர் தப்பிப்போய் விட்டார்கள்.

**சௌம் :** அவர்கட்கு எச்சரிக்கை செய்தது யார்?

**சேவ :** நல்ல நம்பியார்.

**சேனு :** ஆகா பார்த்தாயா அவன் செய்த மோசத்தை!

**சௌம் :** அரசர் எங்கே போயிருக்கலாம்?

**சேவ :** குன்ற நகரில் இருக்கிறார். இந் நேரம் மற்ற நகரங்களி லிருந்து அரசருக்கு உதவியாகப் படையும் வந்து சேர்ந் திருக்கலாம்.

**சேனு :** உடனே சௌம்யா, சந்த்ரசேனரிடம் இதையெல்லாம் கூறு. நானும் இதோ வருகிறேன்.

(சௌம்யன் போகிறான்.)

## காட்சி 12. அ.

[சேனுபதி சிறியதோர் சேனையுடன் மாளிகையைவிட்டு வெளி வரும்போது, நல்லநம்பி எதிர்ப்பட்டார். அவர் சேனு பதியை நோக்கி,]

சேனுபதி, அரசர் பக்கமிருந்த அனைவரும் பணிந்து போனார்கள். இம்சைக்கோ உயிர்ச் சேதத்திற்கோ அவசிய மில்லாது போனதுபற்றி எனக்குள்ள மகிழ்ச்சி அளவு கடந்ததாகும்.

சேனு: எனக்கும் சந்தோஷமே. ஆனல் நாட்டின் நன்மையை யுத்தேசித்து, உம்மைப் போர் முடியும்வரைக்கும் காவலில் வைக்க நினைக்கிறேன். சேனு வீரர்களே! நல்ல நம்பி யாரை இரு கைகளையும் சங்கிலியால் கட்டி, அழைத்துப் போய் மணியாற்றங் கரைக்கு அப்புறமிருக்கும் பாழ்மண் டபத்தில் வைத்து, உங்களில் ஐம்பது பேர் காவல் இருங்கள்.

[உடனே சேனுவீரர்கள் நல்லநம்பியாரைச் சங்கிலியால்கட்டி அழைத்துச் செல்ல ஆரம் பித்தார்கள்.]

ந-நம்பி: மக்கள் அனைவரும் உறவினர். மனிதர் மனிதரை இம்சை செய்யலாகா தென்பது எனது எண்ணம். இதுபற்றி நான் திரிகரண சுத்தியாய்த் தொண்டு செய்து வருகிறேன். இதுதான் நான் செய்த குற்றம். நல்ல தண்டனைதான்!

[நல்லநம்பி முதலியவர்கள் மணியாற்றங் கரையை நோக்கிப் போனதும்,]

சேனு: சேனு வீரர்களே, நல்ல நம்பியாரைக் காவலில் வைத்த விஷயத்தை யாரிடமும் நீங்கள் சொல்லாதிருங்கள். நாம் சந்த்ரசேனரை நோக்கிப் போவோம்.

## காட்சி 12. ஆ.

சௌம்: சுவாமி! நேற்றே நல்ல நம்பியார் நமது நோக்கங்களை யெல்லாம் அரசர் முதலியவர்களிடம் சொல்லி, அவர்களை நிலவறை மார்க்கமாகத் தப்பிப்போகும்படி ஏற்பாடு செய்து விட்டார். அரசர் குன்ற நகரில் சென்றிருப்பதாய்த் தெரி கிறது. அங்கிருந்து கொண்டு மற்ற நகர்ப் படைகளைத் தமக்குச் சாதகமாகச் சேர்த்து வருகிருராம்.

[இது கேட்ட சந்த்ரசேனர் பெருமூச்சு விட்டு,]

அப்பா, ஒன்றும் முழுகிப் போகாது. அரசன் குன்ற நகர் போய்விட்டதுதான், நமக்குக் கொஞ்சம் சிரமத்தை உண்டாக்குவதாக இருக்கிறது. உடனே நீ சென்று சித்ர நகர்ப் பக்கமிருக்கும் கிராமங்களிலிருந்தும் நகரங்களி லிருந்தும் படைகள், குன்ற நகர் நோக்கிப் போகாமல் தடுக்கும்படி சேனுபதியிடம் கூறு. அதுவுமன்றி, நாளை மறுநாள் உனக்குப் பட்டாபிஷேகம் என்றும், அப் பட்டா பிஷேகத்தினிமித்தம் நகரபதிகளும் கிராமபதிகளும் வரவேண்டுமென்றும் இன்றே நகரபதி கிராமபதிகளுக்குத் தூதரை அனுப்ப வேண்டும். தண்டோராமூலம் ராஜதா னிக்கும் தெரியப் படுத்துக.

**சௌம்:** சுவாமி! இந்நாட்டை ஆளத் தக்க திறமையும் கௌர வமும் தங்களுக்கல்லவா உண்டு!

**சந்த்ர:** அப்பா சரியல்ல. நான் சொன்னபடி ஏற்பாடு செய்!

[சௌம்யன் வணங்கிப் போகிருன்,]

## காட்சி 13.

இடம்: சித்ரநகர் தௌம்யன் விடுதி.

காட்சி உறுப்பினர்: தௌம்யன், பொன்னி, குமுதினி, சேனு வீரர்கள்.

**பொன்னி:** நீங்கள் குமுதினிக்குக் கூறிய உறுதி என்ன?

**தௌம்:** அதென்னமோ ஞாபகமில்லே. நீ சொல்.

**பொன்னி :** குமுதினியைவிட்டு நீர் பிரிவதில்லை என்று உறுதி கூறவில்லையா ?

**தௌம் :** ஆம்

**பொன்னி :** அப்படியிருக்க, ஏன் நீர் அவளிடம் போகாமல் இருக்கிறீர்? நீர் குமுதினியைச் சமாதானப் படுத்தாம லிருப்பதால், எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.

**தௌம்:** ஏன் ?

**பொன்னி :** பின்னென்ன ? அன்றிரவு என்னையும் உம்மையும் அவள் பூஞ்சோலையில் கண்டாள். என்மீது நீங்கள் காதல் கொண்டிருக்கிறீர்களாம். அன்றிரவு நான் அவள் தண்டனைக்குத் தப்பியது வெகு அருமையாக முடிந்தது. இதுமாத்திரமா ? குமுதினியிடம் எவனோ அரச குமாரனும் அவன் பெண் வேஷத்தோடு பதுங்கியிருக்கிறான். அவனும் எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளிக்கொண்டே இருக் கிறான். அவன் உங்கட்கு விரோதி ; பெயர் பானு !

[ இது கேட்டதும் தௌம்யன் ஆச்சரியமும் கோபமும் அடைந்து, ]

பொன்னி, நாம் குமுதினியிடம் போவோம் வா !

(என்று கூறித் தன் உடைவாளைத் தாவி எடுத்து அரையில் கட்டினான்.)

**பொன்னி :** இதென்ன உடைவாள் ? நான் சொன்னது பிழை யாகி விட்டது.

**தௌம் :** நீ பயப்படாதே ! அவனால் எனக்கு ஆபத்து ஏற்படாமல் என்னைக் காத்துக்கொள்ள வேண்டாமா ?

(இருவரும் போகிறார்கள்)

# காட்சி 13. அ.

[சுநீதி என்னும் உபசேனுபதி இராஜதானி யிலிருந்துவந்து, சித்ரநகரின் மாளிகையை முற்றுகை யிட்டான். சுநீதியும் சில சேனு வீரர்களும் மாளிகையில் நுழைந்தார்கள். குமுதினி எதிரில் தோன்றினுள்.]

சுநீதி: பெண்ணே, நகரமாளிகையைச் சௌம்ய அரசர்வசம் ஆக்குகின்றேன். உன்னைச் சிறைப் படுத்துகின்றேன்.

குமுதி: நீர் சொன்ன அவர் எப்போது அரசராஞர்?

சுநீதி: ரவிகேது மன்னர் பயந்தோடினுர். இராஜதானி பிடிபட்டது. சிங்கக் கொடி அவிழ்க்கப்பட்டது. இன்று இந்நேரம் சௌம்யனுக்கு அரசபட்டம் சூட்டி யிருப் பார்கள். இதுமாத்திரமல்ல. குன்றநகரில் பதுங்கியிருக்கும் ரவிகேதுவின் அழைப்பின்படி, உனது தந்தை குன்றநகர் நோக்கிப் போய்க்கொண்டிருந்தாரல்லவா? அவரையும் சௌம்ய மன்னரின் சேனைசிறைப்படுத்தி விட்டது.

குமுதி: உங்கள் அரசர் எனது காதலர்!

சுநீதி: தப்ப வழிதேடுகிறீரா?

குமுதி: இல்லை. உண்மையில் அவர் என் உயிர்போன்றவர்.

சுநீதி: இந்த மங்கையைப்பார்த்திருங்கள்!

[என்று சொல்லி நுழைந்தான். இச்சமயத் தில் சௌம்யன் வந்து குமுதினியின் நிலை யைப் பார்த்தான்]

குமுதி: என்னைச் சிறைப்படுத்தப் போவது பற்றி நான் வருந்த வில்லை. என்னை அபயம் என்று அடைந்தவரைக் காப்பாற்றும்படி தங்களை வேண்டுகிறேன்

(இதைக்கேட்ட தௌம்யன், இச்சமயத்தில் சௌம்யன் இருந்தால் குமுதினிக்குக் காப்பளிப்பதோடு, அவள் விரும்பியபடி பானுவுக்கும் மன்னிப்புத் தருவான். ஆதலால், இருவரையும் இப்போது காப்பாற்றியே தீர வேண்டும் என்று நிச்சயித்து,)

பெண்ணே குமுதினி! ஒன்றுக்கும் அஞ்சாதே. அந்த அரசகுமாரனாகிய பானுவையும் நான் ஒரு குறையும் இன்றிக் காபாற்றுகிறேன்.

(என்று உறுதிகூறி, அங்கிருந்த சேனா வீரர்களிடம் ஏதோ ரகசியம் பேசியிருந்தான். அதற்குள் சேனாபதி உள்ளிருந்த பானுமதியை அழைத்து வந்து,)

பெண்ணே இந்த மங்கை யார்?

(என்று கேட்டான். உடனே தௌம்யன் சுநீதியைத் தனியே கைப்பிடித்து அழைத்துப் போய் ஏதோ சொன்னான். அதன்பின் சுநீதி சொல்லுகிறாள் :—)

பானு! உன்னை நமது, இந்தச் சௌம்ய அரசர் மன்னித்தார், அம்மா, உம்மையும் விடுதலை செய்திருக்கிறேன் அரசர் ஆணையின்படி!

**தௌம்:** பானு, எனது குரு சந்த்ரசேனர் மன்னிப்பைப் பெறும்வரைக்கும், எங்கும் அகலாது இங்கேயே இருக்க வேண்டும்.

குமுதினி வருந்தாதே! உன் அந்தப்புரத்திலிரு. நான் இதோ வந்து விடுகிறேன். சேனபதி, நீரும் உமது பரிவாரத்தோடு இங்கே இரும்.

(என்றுகூறி அகன்ருன்)

## காட்சி 13. ஆ.

(வெளியில் காத்திருந்த பொன்னியும் தௌம்யனும் பேசிக்கொண்டே விடுதியை நோக்கிச் செல்லுகிருர்கள்.)

**பொன்னி:** உங்கள்பேரென்ன ?

**தௌம்:** ஏன் கேட்கிருய் பொன்னி?

**பொன்னி:** நீங்கள் பிங்கல நாட்டின் அரசரா ?

**தௌம்:** ஆம்!

**பொன்னி:** எப்போது உங்களுக்குப் பட்டம் கட்டினூர்கள் ?

**சௌம்:** இன்றைக்கு எனக்குப் பட்டங் கட்டவேண்டிய நாள். அதுபற்றி என்னை அங்குத் தேடுவார்கள்.

**பொன்னி:** குமுதினி அதிர்ஷ்டசாலிதான், அவள் பட்டத்தரசி!

**தௌம்:** உன்னையும் நான் மணந்துகொள்ளட்டுமா ?

**பொன்னி:** ஒருபோதும் நான் ஒப்பமுடியாது. என் குமுதினிக்கு துரோகம் செய்வேனு ?

தௌம் : அவளை நான் மணந்துகொள்ளாவிடில்?

பொன்னி : ஐயோ அது ஏன் அப்படி? ஐயா, உங்களை அவள் தன் உயிரைவிட மேலாக மதிக்கிருள், நீங்கள் கை விட்டால் அவள் சாவாள்.

தௌம் : அவள் என்னை மணந்துகொள்ள மாட்டேனென்ருல் நீ என்னை மணந்துகொள்ளச் சம்மதிக்கிருயா?

பொன்னி : நான் அவள்மேல் உங்களுக்கிருந்த அன்பைக் கெடுத்தேன் என்று இவ்வுலகம் சொல்லும். ஆகையால் நான் சம்மதிக்க முடியாது.

தௌம்: குமுதினியைக் காணுமுன் உன்மேல் நான் காதல் கொண்டிருந்தால் சம்மதித்திருப்பாய் அல்லவா?

பொன்னி : ஆம்!

[என்றுகூறிச் சிரித்தாள். விடுதியின் முற்றத்தில் சௌம்யன் தன் முகம் மறைய முக்காடிட்டிருந்தான். அவன் தௌம்யனும் பொன்னியும் வருவதைப் பார்த்தான். பொன்னி வருவதால், தன் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காகக் கஷ்டமாக இருந்தது. அதற்காக அவன் வருகிற தௌம்யனுக்கும் பொன்னிக்கும் முதுகை மாத்திரம் காட்டியபடி எதிரில் இருந்த சுவரில், 'நான் உன்னிடம் தனியாகப் பேச வேண்டும்' என்று எழுதினுன். அதைப் படித்த தௌம்யன் பொன்னியிடம்,]

பொன்னி, நீ போய்ப் பிறகுவா.

(என்றுகூற அவள் நடந்தாள்.)

**தௌம் :** சௌம்யா, நல்ல ஏற்பாடு செய்தாய். என்ன செய்தி உனக்குப் பட்டாபிஷேகம் நடந்துவிட்டதா ?

**சௌம் :** ஆம். ஆடம்பரமில்லாமல் அவசரமாக நடத்தப் பட்டு விட்டது, குமுதினி சௌக்கியமா? அவள் எங்கிருக்கிறுள்? நீ அவ்விடம் எவ்வாறு நடந்துகொண்டாய்? விஷயம் தெரிந்துவிட்டதா என்ன ?

**தௌம் :** படாத அவமானப் பட்டேன் ! குட்டு வெளிப்பட்டு விடவில்லே. அது கிடக்கட்டும். இராஜதானிப் படை ஒன்று மாளிகையை முற்றுகையிட்டுக் குமுதினியைச் சிறைப்படுத் திற்று. நான் தான் சௌம்யனுதலால் அவளைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று.

**சௌம் :** அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன். நல்லவேலே செய்தாய்.

**தௌம் :** அவளுடன் இருந்த பெண் யார் தெரியுமா ? பானு தான் .

**சௌம் :** அட அவனேச் சிறைப்படுத்தினீர்களா அல்லது கொன்று விட்டீர்களா ?

**தௌம் :** சௌம்யா, அதில்தான் நான் பிழைசெய்துவிட்டேன். குமுதினி என்னேக் கெஞ்சிஞள் தன்னிடம் சரண்புகுந்த அரசகுமாரனேக் காப்பாற்றும்படி. நான் அவ்வாறு உறுதி கூறிவிட்டேன்.

**சௌம் :** அப்படிச் செய்திருக்கலாகாது. ஆனுல் நீ தந்த உறுதியை நான் இனி மறுக்கப்போவதில்லே. குருவின் தீர்ப்பு எப்படியோ ?

**தௌம் :** அப்படியானால் நாம் அனைவரும் இராஜதானியை நோக்கிப் போகவேண்டுமே.

**சௌம் :** விரைவாக பேசிக்கொண்டே போகலாம்.

## காட்சி 14.

**இடம் : மணியாற்றங்கரை.**

**காட்சி உறுப்பினர் ;** பத்ரா, நல்லநம்பி, சேனாவீரர்.

*[மணியாற்றின் அக்கரையிலிருக்கும் மண்டபத்தின் வெளிப்புறத்தில், நல்லநம்பியின் இரு கைகளும் இரண்டு இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு, அந்தச் சங்கிலியின் இரு முனைகள் இருபுறம் அடித்துள்ள இருப்பாணிகளில் பிணிக்கப்பட்டிருக்கின்றன. காவலிருந்தவர்கள் ஒரு பக்கம் தூங்கிக் கொண்டிருந்தனர். நல்லநம்பியின் சமீபத்தில் இருவர் மாத்திரம் விழித்தபடி நின்றிருந்தனர்.]*

**ஒருவன் :** பெரியவரே, அள்ளாமல் திருடாமல் இத்தனை அவதி ஏன் உமக்கு ?

**ந–நம்பி :** எவரும் யார்க்கும் பகைவர் அல்லர். எவருக்கும் எவரும் இம்சை இழைக்கலாகாது. இதை உலக மக்கள் உணரும் வரைக்கும் என் போன்றோர்க்கு இதுபோன்ற நிலைமைதான் ஏற்படும்.

**மற்றொருவன் :** உம்மால் ஒன்றும் ஆகாது. நீர் கிழவர் ஆகையால்தான் நீர் வல்லவர்களையும் கையாலாகாதவர்களாக்க முயலுகிறீர்.

**ந–நம்பி :** ஆம் அப்பா.

[என்று கிழவர் கூறித் திரும்பினர். ஆற்றங் கரையில், அந்தஇரவில் ஒரு பெண் ஆற்றை யடுத்த பாறையொன்றில்—தலைவிரி கோல மாக ஏறுவதைப் பார்த்தார்.]

அன்பர்களே, அதோ பாருங்கள். ஆற்றின் அக்கறை யில் ஓர் பெண்! அவள் இந்த அர்த்தராத்திரியில் அந்தப் பாறைமேல் ஏறுவானேன்? அவள், அந்தோ ஆற்றில் விழுந்து தன்னுயிரை மாய்த்துக்கொள்ள நினைக்கிருளா? அன்பர்களே, நீங்கள்போய் அவளைக் காப்பாற்றுங்கள். அதனல் மனித சமுகத்துக்கு நன்மை செய்தவராவீர்கள்.

**1–வது ஆள் :** எமக்கு அதுவேலையல்ல. உம்மைக்காப்பதுதான்.

[நல்ல நம்பி பின்னும் அவளை நோக்கினர். அந்தப் பெண்மணி தன் கைகளை மேலே தூக்கிப் புலம்புவதாகத் தெரிந்தது. நல்ல நம்பியின் உடல் துடித்தது. அவர் மனம் அங்குத் தாவிற்று.]

**2–வது ஆள் :** என்ன ஓடப்பார்க்கிறீரோ?

[என்று கூறி அவரை மறுத்தான். மற்ருெருவனும் அவரைப் பின்நோக்கித் தள்ளினன். பெண்மணி விழப்போகும் சமயம் என்று அவர்க்குத் தோன்றியது. இரு சங்கிலிகளும் அறுந்து வீழ்ந்தன. நல்லநம்பி இல்லை. ஆற்றங்கரையில் இருந்தார். விரைவில் நீந்தி, அக்கரைக்குப்போய்,]

பெண்ணே பொறு! பெண்ணே பொறு!

[என்று கூவினார். அவள் எதிரில் நின்று அவள் இரு கைகளையும் பிடித்தார். நல்லநம்பிக்குக் காவல் இருவரும் அவரைத் துரத்திப் பிடிப்பது ஆகாத காரியம் என்று நினைத்து மற்றவர்களை எழுப்பினார்கள். அனைவரும் சங்கிலிகள் அறுந்து கிடப்பதைக் கண்டு பயந்தார்கள்.]

**ஒருவன் :** இப்படிப்பட்டவரை நான் துரத்துவதாவது அவரைப் பிடிப்பதாவது, நடந்ததைக் கூறி விடுவோம் சேனாபதியிடம்

(போனார்கள்)

**ந—நம்பி :** அம்மா பத்ரா, தற்கொலை செய்துகொள்ள நினைத்தாயா? உனக்கு அப்படிப்பட்ட துன்பம் என்ன?

**பத்ரா :** ஐயா, நான் அநாதை! அந்த அரசகுமாரனை நான் மீண்டும் அடைந்து சுகிக்க எண்ணினேன். நேற்றுப் போரில் அவனைக் கொன்றுபோட்டதாகக் கேள்விப்பட்டேன். இன்னும் எதற்காக இருப்பது?

**ந—நம்பி :** அம்மா, அவன் இறக்கவில்லை. அவனை நான் கூடிய சீக்கிரம் காட்டுகிறேன். நீ அதுவரைக்கும் என்னிடம் இரு.

## காட்சி 15.

இடம்: கொலு மண்டபம்.

காட்சிஉறுப்பினர்: சந்த்ரசேனர், சேனாபதி.

[சந்த்ரசேனரும் சேனாபதியும் அரசன் கொலுமண்டபத்தில் உலவிய வண்ணம் பேசியிருக்கிறார்கள்;]

சந்த்ர : அரசன் தன் துர் நடத்தையால் இந்த மணியாசனத்தை இழந்துபோனான்.

சேனா : சௌம்யனை அரசன் என்று தண்டோராமூலம் தெரியப் படுத்தினோம். சௌம்யன், தந்தை தாய் பெயர் தெரியாத வன் ; நாடோடி என்று குடிகள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

சந்த்ர : இல்லை. அவன் மிகவும் நல்லவன். சுத்த வீரன். அறி ஞன். தன்னுயிர்போல் மன்னுயிரை நினைப்பவன். அவ னிடம் அரசனுக்குரிய முகக்குறி காணப்படுகிறது.

சேனா : ஆனால் ஒன்று; இந்நாட்டின் அரசன் சௌம்யன் என் றும், அவனுக்குப் பட்டாபிஷேகம் என்றும் சேதி வெளிப் படுத்தியிராவிடில், ரவிகேது மன்னன் அழைப்பின்படி நகரப் படைகளும் கிராமப் படைகளும் பெரும்பாலும் ரவிகேது மன்னனிடம் போயிருக்கும்.

சந்த்ர : மேலும் சௌம்யனும் அநேகப் படைகளை ரவிகேது மன்னனிடம் போய்ச்சேராமல் தடுத்துச் சிறைப்படுத்தி விட்டான்.

சேனா : நமது சேனை சித்தமாயிருக்கின்றது குன்ற நகரின்மேற் படையெடுக்க.

சந்த்ர : சௌம்யன் வந்து சேரட்டும். குன்றநகர் மேட்டுப் பாங்கான இடம். எதிரி சேனைக்கு எதிர்ப்புறம் ஒரு படை யைக் காட்டி. மற்றொரு பெரும் படையைப் பின்புறம் செலுத்திக் குன்ற நகரைப் பிடிக்கவேண்டும்.

## காட்சி 16.

இடம்: குன்றநகர் சேர்ந்த ஓர் குன்று.

காட்சி உறுப்பினர்: ரவிகேது, நல்லநம்பி,

[தனித் தனிப் பாறையில் ரவிகேதுவும் நல்லநம்பியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

**ரவிகேது :** நான் நகரபதிகளுக்கும் கிராமபதிகளுக்கும் அனுப்பிய அழைப்புப் போய்ச் சேர்வதற்குள், சௌம்யனுக்குப் பட்டாபிஷேகம் என்ற சேதி அவர்கட்கு எட்டிவிட்டது. அதனால் நான் எதிர்பார்த்தபடி படைகள் வந்துசேரவில்லை. சந்த்ரசேனர் இதற்காகத்தான் அவசரமாக அந்தப் பட்டாபிஷேகச் சேதியைப் பரப்பினார்.

இப்போதும் சந்த்ரசேனரும் சௌம்யனும் இறந்தார்கள் என்று கேள்விப்பட்டால், சேனாபதி உட்பட என்னிடம் சேர்ந்துவிடுவார்கள். இதற்கு ஏதாவது வழிசொல்ல மாட்டீரா நண்பரே?

**ந-நம்பி :** இன்னும், கொல்லுவது என்ற மனப்பான்மை மாறவில்லை உமக்கு ஓர் உண்மையைச் சொல்லவேண்டும் உம்மிடம் நான். சௌம்யன் யார்? உமது புத்திரன் அல்லவா?

[இது கேட்ட ரவிகேது,]

அப்படியா!

[என்று இமாலய ஆச்சரியம் அடைந்தான். மேலும் அவன்,]

நல்ல நம்பியாரே, இது மெய்தானா! விவரம் என்ன?

[என்று ஆவலாய்க் கேட்டான்.]

ந–நம்பி: நீர் உம் பிள்ளையை உமது அண்ணனை தருமிக்குத் தத்தாகக் கொடுத்தீர், அதன் பிறகு உம் அண்ணன், அண்ணி, குழந்தை இவர்கள் தூங்கும் போது மாளிகைக் குத் தீ வைத்தீர். அரசனும் மனைவியும் இறந்தனர். நான் தான், சாகாதிருந்த இந்தக் குழந்தையைச் சேனாபதி யிடம் கொடுத்து வளர்த்து வரும்படி செய்தேன்.

ரவிசே: என் பிள்ளையையும், அவனுக்குக் கல்வி கற்பித்துவந்த சந்த்ரசேனரையும் நான் என் கண்ணால் பார்த்து அவர்களி டம் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு, நான் செய்த பாவங் கட்காக யாத்திரை செல்ல நினைக்கிறேன்.

ந–நம்பி: ஆகா அன்பரே, இன்றுதான் நீர் பரிசுத்தரானீர்! நான் காட்டுகிறேன் அவர்களை! உமது சாந்தமான இரு தயத்தில் குரோதம் தோன்றலாகாது! என்ன சொல்லு கின்றீர்?

ரவிசே: நண்பரே, அரசை அடைபவன் என் மகன்தானே. இதைவிட எனக்கு வேறென்ன பாக்யம் தேவை?

ந–நம்பி: சொட்டு ரத்தம் சிந்தாமல் எல்லாம் சரியாக முடிந் தது. புறப்படுங்கள் என்னுடன் இராஜதானிக்கு.

ரவிசே: இதோ உடை எடுத்து வருகிறேன். என் உயிருக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேரட்டும்.

ந–நம்பி: யாரால், உமது பிள்ளையாலா?

ரவிசே: என் மகனுக்கும், சந்த்ரசேனருக்கும் தெரியுமா நான் சௌம்யனுக்குத் தந்தை என்பது?

ந–நம்பி: தெரியாது. நான் சொல்லுவேன். எதற்கும் அஞ்சா தீர். சீக்கிரம் வாரும்.

# காட்சி 17

இடம்: இராஜதானிக்கு அருகில் உள்ள வழி.

காட்சி உறுப்பினர்: சௌம்யன் முதலியவர்.

*[குமுதினியும் சௌம்யனும் ஒரு ரதத்திலும், தௌம்யனும் பொன்னியும், பானுவும் ஒரு ரதத்திலுமாக ராஜதானியை நோக்கி விரைவாக வந்துகொண்டிருக்கிறார்கள்.]*

**குமுதி:** *இராஜதானிக்குச் சென்றவுடன் என் தந்தையை எனக்குக் கொடுத்துவிடுங்கள்.*

**சௌம்:** *குமுதினி, என தன்பான மாமன் அல்லவா? அதோ பார் உதய சூரியன்! இருள் பறந்தது! உன் துன்பம் அனைத்தும் நீங்கிவிடும்,*

*[எதிரில் போய்க்கொண்டிருக்கும் ஒரு வயோதிகர், பானுவை ரதத்தில் பார்த்து, இரக்கத்தோடு கூறுகிறார்.]*

**கிழவர்:** *அரசகுமாரரே, அதோ நல்லநம்பியாரின் உப்பரிகையில் பத்ரா நின்று உமது பெயரைச் சொல்லி அழுது துடிக்கிறாள். நீர் சீக்கிரம் சென்று அவளுக்கு உயிர்ப் பிச்சை கொடுப்பீர்.*

*(இதைக்கேட்ட பானு,)*

*ஐயோ பத்ரா! நான் பாவி!*

*[என்று கூறித் தன் முகத்தை இரு கையாலும் மூடிக்கொண்டு கதறி,]*

என்னையும் நினைத்தாயா?

[முகத்தைத் திறந்து தலையில் அடித்துக் கொண்டே,]

என் அன்பே! அரசாக்ஞையால் நான் உயிர்விடப் போகும்போது, என்னை நினைத்து வருந்துகிறாயா?

(என்று கூறி அழுதான்)

**தௌம்:** பானு, நீ ஒன்றுக்கும் அஞ்சாதே! பத்ரா உன்மீது காதல் உள்ளவள் என்பது தெரிந்தால், சந்த்ரசேனர் உன்னை மன்னிப்பார். சௌம்ய அரசரோ உனக்கு மன்னிப்புக் கொடுத்துவிட்டார்.

[ரதம் வேகமாகச் செலுத்தப்படுகிறது. பத்ரா உப்பரிகையினின்று, எதிரில் வந்துகொண்டிருக்கும் பானுவின் ரதத்தைக் கவனிக்கிறாள். பானுவும் உப்பரிகையைக் கவனிக்கிறான். உப்பரிகையின் அருகில் ரதம் வந்து நிற்கிறது.]

**பத்ரா:** ஆ!

[என்று தன் இரு கைகளாலும் தாவுகிறாள்.]

**பானு:** பத்ரா!

[என்று தன் இரு கைகளாலும் தாவுகிறான்]

**பத்ரா:** நாதா! என் ஆவி உமக்குச் சமர்ப்பணம்!

(என்று கூறிப் பதறுகிறாள்)

**பானு:** *பத்ரா, நான் செய்த குற்றத்தை க்ஷமித்துவிடு!*

*[பத்ரா இறங்கி ஓடி வந்து ரதத்தின்மேல் ஏறிப் பானுவைக் கட்டித் தழுவிக்கொள்ளுகிருள்.*

*மற்றவர்கள் இரக்கத்தோடு பார்க்கிருர்கள். ரதம் புறப்படுகிறது.]*

*சௌம்யன் ரதமோ முன்னே போய்விட்டது]*

## காட்சி 18.

இடம்: கொலு மண்டபம்.

காட்சி உறுப்பினர்: சந்த்ரசேனர், சௌம்யன், நல்லநம்பி, ரவிகேது, பத்ரா, பானு, குமுதினி, சேனுபதி, தௌம்யன், பொன்னி.

*[சேனுபதியும் சந்த்ரசேனரும், சௌம்யனை எதிர்பார்த்திருக்கின்றனர். மற்ருெருபுறம் நல்ல நம்பியும், தாடிநரைத்த தள்ளாத கிழவன்போல் வேஷமிட்டிருக்கும் ரவிகேதுவும் பேசுகிருர்கள் :—]*

**ந—நம்பி:** *நண்பரே, முடியிழந்தவர் நீர்; அந்த முடியைப்பறித்தவர் சந்த்ரசேனர்; அதைச் சூடியிருப்பவன் சௌம்யன்; உப பலமாக இருந்தவன் சேனுபதிரதன். அவர்களைக் காணுங்கால் உமக்கு உண்டாகும் கோபத்தைச் சாந்தமாக மாற்றிக் கொள்க. எனது கொள்கை இப்போது உமது சாந்த குணத்தால் ஒளி பெற வேண்டும். உமது உடைவாளை அவர்களைக் கண்டதும் கழற்றி அவர்களிடம் சமர்ப்பியும். மறவாதீர். நான் இதோ வருகிறேன்.*

[என்று கூறிச் சென்று, சந்த்ரசேனர் என்ன பேசியிருக்கிறார் என்பதை ஒளிவிலிருந்து கேட்டிருக்கிறார். அதேசமயம் மற்றொருபுறம் குமுதினியிடம் சௌம்யன்,]

நீ இங்கே இரு. நான் கூப்பிடும்போது வா.

[என்றி கூறிச் சந்த்ரசேனரிடம் போனான்.

மற்றொருபுறம் பத்ரா, தன் நாதனை பானுவை நோக்கி,]

நாதா! நீர் இங்கேயே இருப்பீர்; நான் அழைக்கும் போது வரலாம்.

[என்று கூறிச் சந்த்ரசேனர் இருப்பிடம் போனாள்.

மற்றொருபுறம் தௌம்யன் தன் பொன்னியை நோக்கி,]

எனக்கு வெட்கமாயிருக்கும்; நீ இங்கேயே இரு.

**பொன்னி:** அதென்ன வெட்கம்?

**தௌம்:** வந்த இடத்தில் தொத்திக்கொண்டவள்தானே நீ!

**பொன்னி:** அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் எல்லாரும் அப்படித்தாங்காணும்!

**தௌம்:** இருந்தாலும்! நான் சொல்லுவதைக் கேள். கொஞ்ச நேரம் இருக்கக்கூடாதா?

[என்று கூறிச்சந்த்ரசேனரிடம் போகிறான்.

தம்மை வந்து வணங்கி நின்ற சௌம்யனைப் பார்த்து,]

**சந்த்ர:** சௌம்ய மன்னனே, ஆயத்தப் படு! சேனை சித்தமாயிருக்கிறது. குன்றநகரின் குன்றக்கோட்டையை நானும் சேனாபதியும் நேரே நின்று எதிர்க்கிறோம். அதே நேரத்தில் நகருக்குப்பின்புறம் நீ மற்றொரு பெருஞ்சேனையோடு உட்புகுந்துவிடு. நாட்டுக்கு அரசன் நீ. நாட்டு மக்களின் மனோரதத்தை ஈடேற்ற வேண்டுவது உன் கடமை. மக்களை இம்சித்த அந்த ரவிகேதுவை இழுத்துவந்து, உன் கையால் பழிக்குப்பழி வாங்கவேண்டும்.

எனது அருமைக் குமாரி என்றும் பாராமல் அவமானப் படுத்திய பானுவை, நான் கொல்லுவேன்.

(இச்சமயம்)

மோசம் போகின்றீர்!

[என்ற ஓர் குரல் கேட்கிறது]

**சந்த்ர:** நான் மோசம் போகவில்லை நம்பியாரே!

(நல்லநம்பி எதிர்த்தோன்றி)

சந்த்ரசேனரே,

சௌம்யன் ரவிகேதுவைக் கொல்வதா? ரவிகேது சௌம்யனுக்குத் தந்தை என்பதை நீர் அறியீர். தருமி மன்னன் தன் தம்பியாகிய ரவிகேதுவின் குழந்தையை ஸ்வீகாரம் அடைந்து அரசு செலுத்திவந்தான். அவன் அரசாட்

சியைக் கைப்பற்றஎண்ணிட ரவிகேது அவன்மாளிகையில் தீ வைத்தான். சாகாது பிழைத்தவன் செளம்யனுகிய குழந்தை ஒருவன். அவனை நான் எடுத்து வந்து, சேனுபதியிடம் கொடுத்தேன்.

**சந்த்ர :** அப்படியா? என்ன ஆச்சரியம்! பகை உறவாயிற்று!

**ந–நம்பி :** இது மாத்திரமல்ல கேளும்! நீர் பானுவைக்கொல்ல நினைத்தீர். உம் மகள் பத்ரா, தன்னை அந்தப்பானுவுக்குச் சமர்ப்பித்து விட்டாள். பானு இறந்ததாக நினைத்து, ஆற்றில் விழப் போன பத்ராவை நான் காப்பாற்றினேன். உன் அன்பான மருமகனையோ கொல்ல வாளைத் தீட்டுகிறீர்?

[இச்சமயம் பானு, பத்ராவின் தோள்சேர வந்து நின்ருன்.]

அன்றியும், சித்ரநகரின் தலைவனின் குமாரியை இந்தச் செளம்யன் காதலித்திருக்கிருன். அவள் கோரிக்கைக் கிணங்கிப் பானுவை மன்னித்ததாக உறுதியும் கூறினேன்.

[இச்சமயம் குமுதினி செளம்யன் சமீபம் வந்து நின்ருள்.]

மனித சமுகத்தில் பகை என்பது ஒன்றுண்டா? இம்சிப்பதும் கொலை செய்வதும் யார் செய்யும் வேலை?

இதோ பாரும், அந்த ரவிகேது மன்னர் வருகிருர், தமது நண்பராகிய உம்மையும், பிள்ளையாகிய செளம்யனையும் கண்டு, தேசத்தை ஒப்படைக்கவும், தாம் செய்த குற்றத்திற்கு உம்மை யெல்லாம் மன்னிப்புக் கேட்கவும்.

[அனைவரும் அதி ஆச்சரியத்தோடு எதிர் பார்க்க, ரவிகேது தன் சொந்த உருவத்தோடு தான் அணிந்திருந்த வாளை அவிழ்த்துக் கொண்டே,]

அப்பா குழந்தாய்!

(என்று கூவி வந்து, அவிழ்த்த வாளைச் சௌம்யனிடம் நீட்டுகிறான். சௌம்யன் ஒன்றுந் தோன்றாமல் சும்மா இருந்தது நோக்கி, நல்லநம்பி வாளை வாங்கிக் கொண்டு,)

குரோதத்தை வளர்க்கும் உங்களுடைய வாட்களையும் கொடுங்கள்.

[என்று கூறச் சேனாபதியும் சௌம்யனும், தௌம்யனும் அணிந்திருந்த வாட்களையும் நல்லநம்பியிடம் கொடுத்தார்கள். மறுகணம்]

என் மகுடம் பறிக்கவா துஷ்டர்களே!

[என்று ரவிகேது இடிபோல் அதட்டி. மறைவாகக் கட்டியிருந்த மற்றொரு வாளைச் சந்த்ரசேனர் மேல் ஓச்சினான். ஓச்சிய வாள் சந்த்ரசேனர்மீது விழுமுன்,]

ஆ!

[என்றுநல்லநம்பி, தம்மிடமிருந்த வாட்களில் ஒன்றால், ரவிகேதுவின் ஓங்கிய கையை இற்று விழும்படி துணித்து, மறுமுறைஓங்கிய வாளை ஓங்கியபடி நிறுத்தி,]

ஐயோ !

[என்று கூறித் தலையையும் தோளையும் தாழ்த்தி நின்றார்.

அனைவரும் செய்வது இன்னதென ஒன்றும் தோன்றாது நின்றார்கள். வீழ்ந்த ரவிகேது.]

சௌம்யா, பானு! நானும் என் தமையனும் ஆட்சி வெறியால்பரஸ்பரம் பொல்லாங்குபெற்றதுபோலல்லாமல் நீங்கள் ஒத்திருப்பீர்கள். சௌம்யன் சுகமாக இந்நாட்டை ஆளட்டும்.

**சௌம் :** பொல்லாங்கு என்பவை எல்லாந்தரும் இப்பதவியை நான் வேண்டேன் !

[என்று கூறித் தன் மகுடத்தைக் கழட்டி,]

இதைப் பொதுமக்களின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன் ! ஆளுவோரும் ஆட்படுவோரும் மக்கள் !

[என்று கூறித் தரையில் எறிந்தான்]

**சந்த்ர :** குடியாட்சி தழைக !

48489

031:2M9/:12

J6;1